ௐ

# இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—சஅ } யாழ்ப்பாணம்:— தாதுவரு ஆனிமீ கஅஉ (1936 ஜூலாய் 2) வியாழக்கிழமை { இலக்கம்—உ௯


## ரிஷிகேச மஹந்துவின் யோகநிஷ்டை

### வெள்ளி மாது கண்ட விநோத வரலாறு

### 42 தினங்களாகச் சுவாசத்தை அடக்கிச் சமாதி யிருந்தனராம்.

25 வயதுள்ள ஒரு இந்துயோகி, ரிஷிகேசத்தில் அவருக்கென்று பிரத்தியேகமாகக் கட்டப்பட்ட ஓர் கல்லறையில் 42 தினங்களாக அன்னஆகாரமின்றி மூச்சையடக்கிச் சமாதியிலிருந்த விநோதமான வரலாறு இக்கட்டுரையில் வரையப்பட்டிருக்கிறது. வெள்ளை பாத்ரிக மாதினிடம் இதனடியிற் கண்ட விவரங்களை அறிவித்தார். பேரிஹாலோஸ், ஸ்டேட்ஸ்மன் பத்திரிகையில் எழுதியதை இங்கு மொழி பெயர்த்துத் தருகின்றோம்.

ரிஷிகேசத்தின் மஹந்து பின்வரும் விருத்தாந்தத்தை எங்களுக்குத் தெரிவித்தார்.

"அந்த யௌவன புருஷர் தமக்குச் சமாதி அனுஷ்டிக்க வசதிசெய்து கொடுக்க வேண்டுமென்று என்னிடம் வந்தார். அதற்கு முன் இரண்டு தடவைகள் 15 தினங்கள் வரை சமாதியில் இருந்திருக்கிறதாகவும் இப்பொழுது 42 தினங்கள் இருக்க விரும்புவதாகவும் தெரிவித்தார். அவர் தக்க பேர்சுக் கடிதங்கள் கொண்டுவந்திருந்தார். எனினும் நான் அதிகாரிகளுக்குச் செய்தியனுப்பி அவர்கள் அனுமதிபெற்ற பின்னரே யோகியின் வேண்டுகோளுக்கிணங்கினேன். இந்தக்கல்லறை அதற்காகவே கட்டப்பட்டது.

சிலருக்குத் தாரணத்வதக்கடந்த தலைஸ்தானத்திற்குச் செல்ல இரண்டு தினங்கள் வரை ஆகும். அதுவரை சுவாஸம் வேண்டியிருக்கும். அதற்காகவே உயரத்தில் ஜன்னல்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒருவேளை அவர் எதிர்பார்க்கும் காலத்திற்கு முன்பே அவருக்குச் சமாதி கலைந்து விட்டால் அப்பொழுது அவருக்கு சுவாஸம்விட வேண்டியிருக்குமாதலால் ஜன்னல்கள் வேண்டியது அவசியமென்று நான் தீர்மானித்திருந்தேன். மேலும் வேடிக்கை பார்க்க வரும் ஜனங்கள் யோகியைத் தரிசனம் செய்யவும் உதவியாயிருக்குமென்பது என் அபிப்பிராயம்."

அநேக வருஷங்கள் ஆகார நியமங்களை அனுசரித்துப் பல ஆசனங்களையும் அப்பியாசம் செய்து பிராணாயாமப் பயிற்சி நன்கு கைகூடி வந்த பிறகு எவருக்கும் யோகசாதனமேற்படும். இந்த யோகி சில தினங்கள் உபவாஸமிருந்து பிறகு மூன்றுபடி ஜலத்தை ஒரேயடியாக உட்கொண்டு குடல்களை நிரப்பி அவைகளை நன்றாகக் கழுவி வெளியேற்றினார். இதனால் அவருடைய சரீரம் வெறுங் கூடுபோலாய்விட்டது. இவ்வாறே மூக்கு, காது முதலான உறுப்புக்களையும் சுத்தம் செய்துகொண்டார். பிறகு கங்கையில் ஸ்நானம் செய்துவிட்டு கல்லறைக்குள் பளிங்காசனத்தின்மீது பத்மாசனமிட்டு அமர்ந்தார். நாக்கை உட்புறமாகத் திருப்பிச்சுவாசக்குழாயின் துவாரத்தை அடைத்துச் சுவாசபந்தனம் செய்தார். சமாதியிலிருக்கும்போது அமிர்தத்துளிகள் நுனி நாக்கில் சொட்டுவதாகவும் இதனால் ஸ்தூல உடம்பு கெடாமல் காக்கப்படுகிறதென்றும் யோக சாஸ்திரங்கள் கூறுகின்றன.

பிறகு யோகி தனது திருஷ்டியை இரண்டு புருவங்களுக்கும் இடையே நிறுத்தினார். சிறிது சிறிதாக அவருடைய பிரக்ஞை போய்க்கொண்டிருந்தது அவருடைய பிராணன் பிரமரந்திரத்தில் சென்று அடங்கிக்கொண்டிருந்தது. மனித ஜீவன் கடைசியில் சென்று அடங்குமிடம் அதுதான். இதுதான் யோக சாதனத்தில் தலைஸ்தானமாகும். பிராணன் தலைஸ்தானத்தை கடிசென்று கொண்டிருக்கையில் யோகி பெரிய சக்தியையும் மனோதைரியத்தையும் சாந்தியையும் அனுபவிக்கிறான். இந்த நிலைக்குத்தான ஆனந்தமென்று சொல்லப்படும். இந்த நிலை அறிவுக்கெட்டாதது. இந்த நிலையில் தான் ஜீவாத்மா பரப்பிரமமான ஈஸ்வரனுடன் இரண்டறக் கலந்து நிற்கிறது.

* * *

இந்த அற்புத யோகிக்கு சமஸ்கிருதம் தெரியாது. ஆங்கிலமும் தெரியாது. அவரைச் சில கேள்விகள் கேட்டு ஒரு துவிபாஷி மூலம் நாங்கள் பின்வரும் விஷயங்களைத் தெரிந்துகொண்டோம்.

சமாதி நிலையில் அவருக்குப் பிரக்ஞை இருந்ததா இல்லையா என்பது அவருக்கே தெரியாது. ஒரு ஆனந்த மயமான அனுபவத்தைத்தான் அவர் கண்டார். அந்த நிலையில் காலத்தின் வேறுபாடுகள் தெரியாது. அதாவது ஒரு விநாடிக்கும் ஒரு வாரத்திற்கும் உள்ள வேற்றுமை தெரியாது. இந்த யோகி தமக்கு எவ்வித சித்தியும் வேண்டுமென்று விரும்பவில்லை. ஒரே விநாடிக்

தொடர்ச்சி 7ம் பக்கம்.

திரு இன்னம்பர்: திருக்குறுந்தொகை

என்னி லாரும் எனக்கினி யாரில்லை
என்னி லும்இனி யானொரு வன்னுளன்
என்னுளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கும் இன்னம்பர் ஈசனே

—திருநாவுக்கரசு சுவாமிகள்

### தென்னை மரங்களால் இருவருக்குக் காயம்.

கொழும்பு 27

நேற்று முன்தினம் கந்தானையிலிருந்து இரண்டுபேர்கள் கொழும்பு பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டனர். அவர்களில் ஒருவர் மீது தென்னைமரமொன்று வீழ்ந்ததால் காயமடைந்தவர். மற்றவர் தென்னை மரத்திலிருந்து கீழே விழுந்தால் காயமடைந்தவர்.

## வெண்பாவில் புகழேந்தி

### பண்டிதர் கா. பொ. இரத்தினம் சொற்பொழிவு

"ஒள்ளியர் தெள்ளியராயினும் ஊழ்வினை பைய நுழைந்துவிடும்"

(முற்றொடர்.)

இவதிச்செய்யுள் இடைக்காலத் துள்ளவர்களால் புகழேந்தியாரை உயர்வுபடுத்தி ஒட்டக்கூத்தரை இழிவு படுத்துவதற்காக ஆக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்ற தேசி? அன்றேல் அவ்விரு கவிவாணர்களும் பாடியதுதானோ எனத் தெரியவில்லை. அவ்விருவரும் பாடியதுதானெனில் இவ்வெண்பாவிலும் புகழேந்தி இருக்கிறார் என்பது வெள்ளிடை; என்னை? செம்பியனைச் சிறப்பிக்கும் ஷோக்கபாகப் பாடத் தொடங்கிய கூத்தர் தம் பாட்டின் பாதியை முடிக்க முனைவதற்குள் புகழேந்தியார், வெண்பாவிசைப்பதில்தமக்குள்ள அளவிறந்த ஆற்றலால் முட்டின்றியதனை முடித்துத் தம் அரைபனைப் புகழ்ந்து செம்பியனைப் பழித்தமையினாலென்க

வழுதி தம் மாமகளைப் பொன்னி நாடாளும் புரவலனுங் குலோத்துங்கனுக்கு மனைவியாக்க மனமிசைந்தான். கூத்தர் சோணாடு சென்று செய்தியைத் தெரிவித்தார். மணச் செய்தியை அறிந்த மாந்தர் அனைவரும் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தனர்.

### ஊழ்வினை உயர்வு தாழ்வு பாராது

மணவினை மதுரை மாநகரில் பல சிறப்புக்களோடு நடத்தப் பட்டது. சில நாட்களிற்சோழன் தன் மனைவியுடன் தன்னாடு சென்றான். புகழேந்தியாரும் அங்ஙனே சென்றார். புகழேந்தியாரது வருகையையறிந்த கூத்தர் முன்னமே அவர்மீது தமக்கிருந்த புலமைக்காய்ச்சலால் அவரைச் சிறை செய்வித்தார். ஊழ்வினை உயர்வு தாழ்வு பாராது எவரையும் ஒரு தன்மையராகவே மதித்துத் துன்புறுத்தும் வன்கண்மை உடையது.

"ஒள்ளியர் தெள்ளியராயினும் ஊழ்வினை பைய நுழைந்து விடும்" என்பதைச் சம் புகழேந்திப் புலவர் நன்கு அறிந்தவராதலால், அவர் தமக்கு நேர்ந்த விதியை வெறுத்துரையாராய் அதனைத் தப்பத்து வந்தார். இன்னும் இவர் தமது நளவெண்பாவில் இவ் விதியைப் பற்றி இடையிடையே "கடப்பாரெவரே கவினையை", "பண்டை வினைப்பயனைப் பாரிடத்தில் யார் கடப்பார்"? "மாயம் பலசூழ்ந்து தெய்வஞ் செறுத்தாற் செயலுண்டோ" எனக் கூறியிருப்பன கவனிக்கற்குரியன. சிறையிலிருந்த புலவர் அவ்வழியால் தண்ணீர் மொள்ளச் செல்லும் பெண்கள் காதுக்கு இனிமையாயும் எளிதிற் பொருள் விளங்கும் படியாயும் பாரதத்தின் சிலகதைகளை அல்லி யரசாணிமாலை, பவளக்கொடிமாலை முதலிய நூல்களாகச் சொற்சுவை பொருட்சுவை தோன்ற யாத்து அவர்கள் கேட்கும்படி கூறினர்.

### தாழிட்ட கதவு திறபட்டவிதம்

அவர் கூறியன யாவும் மாதர் நிறையினை விளக்கி அவர் மனதை ஈர்க்கும் இயற்கை நலம் வாய்ந்து இருந்ததினால் அப் பெண்கள் பல உணவுப் பொருட்களைக் கொடுத்து அவரை உபசரித்தனர். இவ்வாறு இவர் சிறையிலிருப்பதை அறிந்த பாண்டியன் திருமகள் தன் நாயகன் ஆற்றும் அரசியல் வழுவால் தன் ஆசிரியராகிய தண்டமிழ்ப் புலவர் சிறையிடப் பட்டவரென்றெண்ணி அதனைத் தீர்ப்பதற்காக அரண்மனையின் பொற்கதவைச் சாத்தித் தாள் இட்டாள். அரசியின் செயலிற்குக் காரணம் விளங்காத அரசன் தேவியின் ஊடலைத் தணிப்பதற்குத் தனது தமிழ்ப் பேரவையின் தமிழ்ப் புலவரும் தனது ஆசிரியருமான ஒட்டக்கூத்தரை அழைத்து, அரசியின்

தொடர்ச்சி 2ம் பக்கம்

## வெண்ணிலா

(வெண்ணிலா என்பது இங்கு சந்திரனுடைய பிரகாசத்தையன்று, சந்திரனையே குறிப்பது.)

4
காதலர் நெஞ்சை வேதுப்புவை நீயென்பர் வெண்ணிலாவே—நினைக்
காதல் செய்செய்வார் நெஞ்சிற் கின்னமு தாகுவை வெண்ணிலாவே
சீத மணிநெடு வானக் குளத்திடை வெண்ணிலாவே—நீ
தேசு மிகுந்தவெண் டாமரை போன்றனை வெண்ணிலாவே
மோத வருங்கரு மேகத் திரளினை வெண்ணிலாவே—நீ
முத்தி னொளிதந் தழகுறச் செய்குவை வெண்ணிலாவே
தீது புரிந்திட வந்திடும் தீயர்க்கும் வெண்ணிலாவே—நலஞ்
செய்தொளி நல்குவர் மேலவரா மன்றோ வெண்ணிலாவே

5
மெல்லிய மேகத் திரைக்குள் மறைந்திடும் வெண்ணிலாவே—உன்றன்
மேனி யழகு மிகைபடக் காணுது வெண்ணிலாவே
நல்லியலார் யவனத்தியர் மேனியை வெண்ணிலாவே—மூடு
நற்றிரை மேனி நயமிகக் காட்டிடும் வெண்ணிலாவே
சொல்லிய வார்த்தையில் நாணுற் றனைபோலும் வெண்ணிலாவே—நின்
சோதி வதன முழுது மறைத்தனை வெண்ணிலாவே
புல்லியன் செய்த பிழைபொறுத்தே யருள் வெண்ணிலாவே—இருள்
போகிடச் செய்து நினதெழில் காட்டுதி வெண்ணிலாவே.

—சுப்பிரமணிய பாரதியார்

## பாலர் பகுதி

## எங்கள் சங்கம்

அருமை மருமக்காள்!

உங்களோடு நான் நேர்முகமாக அளவளாவிப் பேசிப் பல நாட்கள் ஆகின்றன. சில நாட்களாக எனக்குச் சுகவீனம் ஏற்பட்டிருந்தது. பிறகு சில நாட்களாக, நான் ஓர் அவசியமான விஷயம் சம்பந்தமாக வெளியூருக்குப் போகவேண்டி நேரிட்டது. ஆதலால் என் கண்ணின் மணியன்ன மருகரோடும் மருகியரோடும் ஆவல்தீரச் சம்பாஷிக்கவும், அவர்கள் கூறும் தேனினும் இனிய மழலைச் சொற்களைக் கேட்டு மகிழவும், எனது மருகரும மருகியரும் எழுதும் இனிமையான கடிதங்களைப் படிக்கவும் எனக்கு நேரம் கிடைக்கவில்லை. இதற்காக நான் மிகவும் வருந்துகின்றேன். நீங்களும் என்னை மன்னிப்பீர்களென்று நினைக்கிறேன். நான் இல்லாத நேரத்தில் உங்கள் கடிதங்களைப் பார்க்கவும் அவற்றிற்கேற்ற பதில் எழுதவும் எனது கிளார்க்குக்கு கட்டளையிட்டுப் போனேன். அவரும் சிறிது பராமுகமாயிருந்து விட்டார்போலத் தெரிகிறது. எந்தெந்த மருகர் மருகியர் எனக்குக் கடிதம் எழுதினர்களோ என்று கூட எனக்குத் தெரியவில்லை. போகட்டும். போனதை நினைந்து இனி வருந்திப் பிரயோசனமில்லை. அப்படியல்லவா? ஆதலால், இனிச் செய்யக்கூடியதைத் தாமதமின்றிச் செய்யவேண்டும். என்ன சொல்லுகிறீர்கள்? எங்கள் பாலர்சங்கமும் சிலகாலம் நித்திரைகொண்டு விட்டது. அது புதினமா? பெரிய சங்கங்களெல்லாம் இடையிலே இப்படியே நித்திரை தூங்கிவிடுகின்றன. ஏன்? சில சங்கங்கள் நித்திய நித்திரை கொண்டு விடுகின்றன. பெரிய மனுஷர் என்று தம்மை அழைத்துக் கொள்ளுவோரால் ஆரம்பிக்கப்பட்ட எத்தனை சங்கங்கள் இப்போது இப்படி நித்திரை கொள்கின்றன என்று தெரியுமா! அவற்றைப்பற்றி நாங்கள் இங்கே எழுதினால் அது பெருங் குறையாக வந்து முடியும். ஆதலால், இவ்வளவோடேயே அதை விட்டுவிடுவோம். ஆனால், இப்படிப் பெரிய பெரிய சங்கங்கள் இடையிலே தூங்கிவிடுகின்றனவென்றால், எங்கள் பாலர் சங்கம் சிறிது காலம் அமைதியாக இருந்து விட்டது புதினமா? என்ன சொல்லுகிறீர்கள்! ஆனால், இனியேனும் அப்படிஇருப்பது அழகல்ல. ஆதலால், அருமைமருமக்களே, முன்போல அல்லது அதினும் மும்முரமாக, நாம் நமது சங்கத்தை நடத்துதல்வேண்டும். நீங்கள் அடிக்கடி உங்கள் மாமாவை வந்து கண்டு போதல்வேண்டும். வரமுடியாதவர்கள் கடிதம் எழுதுதல்வேண்டும். நீங்கள் இடையிடையே சில வியாசங்கள் எழுதி அனுப்பலாம். உங்கள் கடிதங்கள் தவறாமல் கவனிக்கப்படும். உங்களுக்குப் பரிசாகக் கொடுப்பதற்காக வாங்கப்பெற்ற விளையாட்டுச் சாமான்கள் இன்னும் பல இருக்கின்றன. சமீபத்தில் கொழும்பிலிருந்துகூட ஒரு மாமா மூன்று படங்களை உங்களுக்குப் பரிசாகக் கொடுக்கும்படி அனுப்பி யிருக்கிறார். ஆதலால் பரிசுப் பொருள்களுக்குக் குறைவில்லை. ஆனால், நீங்கள் இனிமேல உங்கள் சங்கத்தில் மிக்க ஊக்கமெடுத்துக் கொள்ள வேண்டும். இப்போது சிறுபிள்ளைகளாக இருக்கும் நீங்களே எதிர்காலத்தில் பெரிய சனத்தலைவர்களாகவும், அரசியல் விற்பன்னர்களாகவும், நீதிபதிகளாகவும், டக்டர்மாராகவும், வழக்கறிஞர்களாகவும், பத்திராசிரியராகவும், யுத்த வீரர்களாகவும், புலவர்களாகவும், பண்டிதர்களாகவும், ஆசிரியர்களாகவும், பிரபல வர்த்தகர்களாகவும் இன்னும் பல உத்தியோகஸ்தர்களாகவும் வரப் போகிறீர்கள். எதிர்கால இலங்கை உங்களாலேயே நடைபெறவேண்டி யிருக்கிறது. ஒருவேளை இன்னுஞ் சில வருஷங்களில் ...ங்களிற் சிலர் என்னைப்போல




இத்தகைய ஒரு பத்திரிகை நிலையத்தில் உட்கார்ந்துகொண்டு அக்காலத்திற் சிறுபிள்ளைகளாயிருப்போருக்குப் புத்திமதிகளை எழுதுதல்கூடும், அப்படியல்லவா! ஆதலால், நீங்கள் எவ்வளவு பெரிய மனுஷர் என்று சிந்தித்துப் பாருங்கள்! எனது மருகியரிற் சிலர் மிகவும் கற்றுத்தேறி ஸ்ரீமதி சரோஜினி நாயுடு முதலிய பெண்மணிகளைப் போலத் தேசத்தொண்டு செய்வதற்கு முன்வருதல் கூடும். பார்த்தீர்களா? அப்போதெல்லாம் நீங்கள பெரிய சங்கங்களை நடத்த நேரிடும். ஆதலால் இப்பொழுதே இந்தப் பாலர்சங்கத்தில் அதற்குரிய பயிற்சிகளைப் பழகிக்கொள்ளுங்கள். சென்ற திங்கட்கிழமையன்று நமது அரசாங்கசபைத் தலைவராகிய திரு. வை. துரைசாமி அவர்களுக்கு ஒரு வரவேற்புக்கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்தில் அவர், பேசும்போது தாம் மாணாக்கனயிருக்கும்போது இருந்த நிலையை நினைக்கத் தனக்குப் பெரிய மகிழ்ச்சி உண்டாகின்றது என்று தெரிவித்தார். பார்த்தீர்களா பாலப் பருவத்தின் அருமையை? இப்பொழுதே நீங்கள் உயர்ந்த லக்ஷியங்களைக்கொண்டு வளரவேண்டும். ஆதலால், அடுத்த திங்கட்கிழமை அல்லது அதற்குமுன் எனக்குக் கிடைக்கக் கூடியதாக நீங்கள் ஒவ்வொரு கட்டுரையெழுதி அனுப்பவேண்டும். நீங்கள் உங்கள் எதிர்காலத்தில் என்னவாக இருக்க விரும்புகின்றீர்கள் என்பதையும், அவ்வாறு நீங்கள் விரும்புதற்கு உரிய நியாயங்களையும் அதில் எழுதவேண்டும். யார் மிகத் திறமான விஷயமாக எழுதுகின்றார்களோ அவர்களுக்கு யான் ஒரு பரிசு வழங்குவேன். ஆதலால் நீங்கள் ஒவ்வொருவரும் தவறாமல் ஒவ்வொரு கட்டுரை எழுதுங்கள்.

இப்படிக்கு
உங்கள் அன்பு மறவாத
சுப்புமாமா.

## பொதுத் தேர்தல் எதிரொலி

### கலக வழக்கில் எதிரிகளுக்கு 3 வாரம்

(1) ஆறுமுகம் கந்தசாமி, (2) நாகமுத்து, (3) சின்னக்கண்டு, (4) முருகேசு எனனுமிவர்கள் பருத்தித்துறைப் பகுதித் தேர்தல் நடந்த காலத்தில் தொண்டமானாறு திரு வி சுப்பையா, திரு. வி. இராசசேகரம் என்னுமிவர்களுடைய மோட்டாரத்தை வழிமறித்துத் தடுத்து அவ்விருவரையும் தாக்கினார்களென்ற வழக்கு பருத்தித்துறைப் பொலிஸ்கோட்டில், நீதிபதி மிஸ்டர் ஒருட்நிக்கோ அவர்களால் விசாரணை செய்யப்பட்டு, எதிரிகளுள் மூவர் தனித்தனி 3 வாரக் கடுஞ்சிறை விதிக்கப்பட்டனர்,

## கீர்த்தனசாரியர் மரணம்

### அவர் அரிய சேவைகள்

கீர்த்தனச்சாரியார் ஸி. ஆர். ஸ்ரீநிவாச ஐயங்கார் சென்ற ஜூன் 26-ந் திகதி 6—45 மணிக்கு சென்னையில் மயிலாப்பூரில் அவருடைய ஜாகையில் மரணமடைந்தார்.

ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸஐயங்கார் 1867-ம் வருஷத்தில் தஞ்சை ஜில்லாவில் பிறந்தார் 1887-ம் வருஷத்தில் திருச்சி செயின்ட் ஜோஸப் கலாசாலையிலிருந்து படித்துப் பீ. ஏ. பட்டம் பெற்றார். அவர் எல்லாப் பரீக்ஷைகளிலும் முதல் வகுப்பில் தேறியதுடன் சரித்திரம் பொருளாதார சாஸ்திரம் இவற்றில் மாகாணத்தில் முதன்மையாயும் ஆங்கிலத்திலும் சம்ஸ்கிருதத்திலும் மாகாணத்தில் இரண்டாவதாயும் இருந்தார். 1892-ம் வருஷத்தில் சைதாப் பேட்டை போதனா கலாசாலையிலிருந்து எல். டி. பட்டம் பெற்றார்.

பிறகு சென்னை மாகாணத்தில் பல கல்வி ஸ்தாபனங்களில் ஆசிரியராக வேலை பார்த்தார். சென்னை விசிஷ்டாத்வைத கலாசாலையின் தலைவராகவும் கும்பகோணம் கவர்ன்மெண்டு கலாசாலையில் ஆசிரியராகவுமிருந்தார்.

ஹடயோகப் பிரதீபிகை, வால்மீகி ராமாயண மொழி பெயர்ப்பு, ஸ்ரீ சங்கராச்சாரியார் சரித்திரம், ஸ்ரீ ராமானுஜர் சரித்திரம், தீர்க்கதரிசிகள் சரித்திரம், பகவத்கீதை வியாக்கியானம், ஸ்ரீராமச் சந்திர, சயவனமகரிஷி, பீஷ்மர், ஸாவித்திரி உபநிஷத்துக்களின் வியாக்கியான முதலியவற்றையும் இன்னும் பல நூல்களையும் அவர் எழுதியிருக்கிறார்; இன்னும் பல நூல்களை எழுத ஏற்பாடு செய்து வந்தார்.

ஸங்கீத உலகத்திலேயே அவர் அதிகமாக விளங்கிவந்தார். ஸ்ரீ, தியாகராஜ ஸ்வாமி கீர்த்தனங்களை ஸ்வரப்படுத்தி வெளியிட்டிருப்பதுடன் அர்த்தத்துடன் சுதேசமித்திரன் வாரப்பதிப்பிலும் வெளியிட்டு வந்தார். சென்ற 20-வருஷங்களாகப் பத்திரிகைகளில் ஸங்கீதத்தைப் பற்றி எழுதிவந்திருப்பதுடன் கிராமபோன் ரிகார்டுகளுக்கும் விமர்சனம் எழுதிவந்தார். அவருடைய கலைக்ஷேபத் திறமையை உத்தேசித்து கீர்த்தனசாரியார் என்ற பட்டமும் தியாகையருடைய கீர்த்தனங்களைச் சரியானபடி விளக்கி வந்ததற்கு அபிநவத் தியாகப் பிரும்மம் என்ற பட்டமும் அளிக்கப்பட்டன.

கொச்சி சமஸ்தானப் பள்ளிக்கூடங்களுக்குச் சங்கீதப் பரீக்ஷகராக விருந்தார். ஸங்கீதப் பாடங்களை நிர்ணயிப்பதற்கான கமிட்டி மெம்பராகச் சென்னை அண்ணாமலை ஆந்திர சர்வகலாசாலைகளால் நியமிக்கப்பட்டிருந்தார். பரோடாவில் நடந்த முதலாவது அகில இந்திய சங்கீத மகாநாட்டிற்குப் பிரதிநிதியாகச் சென்று நிரந்தரக் கமிட்டி மெம்பராகத்தேர்ந்தெடுக்கப்பட்டார். முதலாவது தென்னிந்திய பிரசங்கான (கோஷ்டி) சங்கீதத்தைக் கவர்னராயிருந்த லார்டு வில்லிங்டன் முன்பாக நடத்தினர்.

சென்னையில், 1929ல் நடந்த முதலாவது அகில இந்திய சங்கீத மகாநாட்டில் தலைமைவகித்தார். அதிலிருந்து சென்னை சங்கீதக்கமிட்டியும் ஸ்தாபிக்கப்பட்டது. அடையாறு நாஷனல் காலேஜில் ஸங்கீதப்பிரிவை யேற்படுத்திவந்தார்.

வீணை விஜயநகரம் வெங்கடரமணதாஸ் வாய்ப்பாட்டு கும்பகோணம் கோபால ஐயங்கார் புல்லாங்குழல் சரபசாஸ்திரிகள் தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதர் உமையாளபுரம் பாகவதர்கள் ப்ரொபசர் அப்துலகரீம்கான் முதலியவர்களிடம் இவர் கற்றுக்கொண்டார்.

ஸங்கீத உலகத்திற்கு இவர் செய்துள்ள சேவை இணையற்றது.

## வெண்பாவில் புகழேந்தி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிணக்கைத் தீர்க்குமாறு அனுப்பினன். கூத்தரும் அரசன் விருப்பப்படி அந்தப் புரத்தை அடைந்து தாழிட்ட கதவின் அருகிலிருந்து பாடினர். அவர் பாடலைக் கேட்ட பாண்டியன் மகள் மிகுந்த சீற்றமுடையவளாய் "ஒட்டக்கூத்தர்பாட்டிற்கு இரட்டைத்தாழ்" என்று மற்றொரு தாழையும் சடக்கென இட்டனள். கூத்தர் மிகவும் வெட்கமும் துக்கமு முடையவராய்க் குலோத்துங்கனிடம் சென்று நிகழ்ந்ததை உரைத்தனர். பின்னர், புகழேந்தியாரைச் சிறையிலிட்டமையே அரசியின் ஊடலுக்குக் காரணமென உணர்ந்த அரையன் அவரைச் சிறையகத்தினின்றும் அழைப்பித்து இன்னுரை கூறி அரசியின் ஊடலைத் தணிக்குமாறு அனுப்பினன். புலவர் பாண்டியன் புதல்வியின் பள்ளியறையின் பொற்கதவு அருகுபோய்

"நானே யினியுன்னை வேண்டுவதில்லை நளினமலர்த்
தேனே கபாடம் திறந்திடுவாய் திறவாவிடிலோ
வானே றனைய இரவி குலாதிபன வாசல்வந்தால்
தானே திறக்கு நின் கைத்தல மாகிய தாமரையே"

என்னும் விழுமிய பொருளையுடைய இனிய செய்யுளைச் செப்பினர். இச்செய்யுளைக் கூத்தர் கூறியதாகக் கூறுவார் கூற்றுப் பொருத்த முடையதொன்றன்று இச் செய்யுளில் "நளின மலர்த் தேனே" என அழுதி மகளை அன்பு கலந்த இன் சொற்களால் அழைத்தமையும் இரவி குலாதிபன் வந்தவிடத்துக் கைத்தலமாகியதாமரை கதவைத்திறக்க வேண்டுமெனக் குறித்தமையும் வியக்கத் தக்கன. புலவர் செப்பிய செய்யுளின் நுண்பொருள் நலத்தைத் தெள்ளிதுணர்ந்த பாண்டியன் புதல்வி புனிற்றுவின் குரலைக் கேட்டுச் செல்லும் இளங் கன்றைப்போல் கபாடத்தைச் சடக்கெனத் திறந்து அவரருகு சென்று வணங்கினள். அவர் அவளுக்குப் பல ஆறுதல் மொழிகளை அறிவுறுத்தி அவளுடைய சீற்றத்தையும் துக்கத்தையும் மாற்றினர். அப்பால் புலவர் புரவலனுல் மிகவும் போற்றப்பட்டு அவன்றன் அவைக்களப் புலவராய் விளங்கி வந்தார். சில நாட்களின் பின்னர் புகழேந்தியார் சோணாடு நீங்கி, புலவர்களைப் பொன்போற் போற்றுவதிலும் தமிழாராய்வதிலும் மிகவுஞ் சிறப்புடையவனுய் வளங்கிய மள்ளுவ நாட்டுக் குறுநில மன்னனாகிய சந்திரன்சுவர்க்கியிடம் சென்றனர். புலவரைக் கண்ட புரவலன் மனமிக மகிழ்ந்து வரவேற்று இருக்கை நல்கி, இன்னுரைகூறி உபசரித்தான். நம் புலவர் அவ்வனது அருந்தமிழ் அவையில் தலைமை தாங்கி அவனுடனுறைந்து வந்தார். அருந்தமிழ் அன்னையாகிய ஒளவையாரைப் பாத்தனென்பானும் கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பனைச் சடையப்ப வள்ளலும் வில்லிபுத்தூராழ்வாரைக் கொங்கர் கோமானும் மண்டல புருடனை விஜய நகரத்து வேந்தனும் எவ்வாறு போற்றி ஆதரித்து வந்தனரோ அவ்வாறு புலியேறு போன்ற புகழேந்திப் புலவரைச் சந்திரன் சுவர்க்கியும் அன்புடன் போற்றி ஆதரித்து வந்தான்.

### நல்விருந்தாகிய நளவெண்பா

இவ்வாறு ஆதரித்து வரும் நாட்களில், புரவலன் புகழேந்திப் புலவரை நோக்கிவடமொழிப்பாரதத்திலுள்ள நளனது வரலாற்றைச் செந்தமிழ்ப் பாவிற் செவ்வனே பாடித் தமிழுலகத்திற்கு நல்விருந்தளிக்க வேண்டுமென்று கேட்டான். அதனைச் செவி மடுத்த செந்தமிழ் வாணர் அவனது செவ்விய உள்ளத்தையும் பிறர்க்குதவும் பான்மையையும் புலவரை ஆதரிக்கும் தன்மையையும் தமிழரிடத்துக் கொண்ட ஆர்வத்தையும் தமது நன்றியறிதலையும் சூதாடுதலின் தீமையையும் பண்டைண்ணைப் பயனைப் பாரிடத்தில் ஆர் கடப்பார் என்பதனையும் இன்னும் பல நீதிகளையும் உலகினர்க்கு அறிவிக்க எண்ணி, 'புலவர்க்கு வெண்பாப் புலி' எனச் சிறப்பித்து ஓதப்பெறும் வெண்பாயாப்பில் நானூற்றுக்கு அதிகமான செய்யுட்களால் நளசரித்திரத்தைத் தெண்டிரை அமுதமொவ்வாத் தீஞ்சுவை நனி சொட்டச் செவ்விதிற்பாடி யாவருங்கேட்டு இன்பவாரிதியிலழுந்துமாறு அவனது அவைக்களத்தில் அரங்கேற்றினர்.

### சில வேறுபாடுகள்

நளவெண்பா என்பது நளனுடைய சரித்திரத்தைக் கூறும் வெண்பாவாலாகிய நூலெனப் பொருள் படுதலின் அடையடுத்தகருவியாகுபெயர். இதற்கு முதனூல் வியாசபாரதத்திலுள்ள நளோபாக்கியானம் என்பர். இது பாயிரம், கலிதொடர் காண்டம் கலிநீங்குகாண்டம் சுயம்வர காண்டம் என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. வடமொழி நைடதத்தின் வழிநூலாக அதிவீரராம பாண்டியனியற்றிய நைடதமும் நளசரித்திரமே கூறுகின்றதெனினும் புகழேந்தியார் கூற்றுக்கும் பாண்டியனுடைய கூற்றுக்கும் பல வேற்றுமைகள் காணப்படுகின்றன.

தேவர்களால் தூதனுக அனுப்பப்பட்ட நளனெடு தமயந்தி உரையாடினளென்று நளவெண்பா கூற, நைடதமோ தோழியர்களே உரையாடினர்களென்று கூறுகிறது. நைடதத்திற் கூறப்படும் நளன் தமயந்திபிடம் தூதுசென்று மீண்டபின் அன்னம் தமயந்தியைச் சந்தித்தது என்பதும், தமயந்தி நளனுக்குச் சுயம்வர மாலை சூட்டியதைப் பொறாத இந்திரனேவலால் மற்றைய அரசர்கள் அவனேடு பொருதனர் என்பதும் நளவெண்பாவிற் காணப்பட்டில. இன்னும் வேடனை நீருக்கிய பின் தமயந்தி வணிகனொருவனைச் சந்தித்தாளென்றும் அவனுற் சேதிநகர்ச் சேரும் வழியை அறிந்தாளென்றும் நளவெண்பா கூற நைடதம் அவள் முனிவர்களைச் சந்தித்தாளென்றும், வணிகர்கள் பலரைக் கொன்ற யானை ஒன்றைச் சந்தித்தாளென்றும் கூறுகிறது. இவ்வேறுபாடுகளுக்கு இவற்றின் முதனூல்கள்தாம காரணம் போலும்.

முதல்முதல் நளசரித்திரம் சுருக்கமாகப் பொறிக்கப்பெற்றுள்ள தமிழ் நூல் சேரர் சிகாமணி செய்த சிலப்பதிகாரமேயாகும். அதில்,

"வல்லாடாயத்து மண்ணரசிழந்து
மெல்லியல் தன்னுடன் வெங்கானடைந்தோன்
காதலிற் பிரிந்தோ னல்லன் காதலி
தீதொடு படூஉஞ் சிறுமையளல்லள்
அடவிக் கானகத் தாயிழை தன்னை
இடையிருள் யாமத்திட்டு நீக்கியது
வல்வினைவன் றோ"

என மிக நன்றாகக் கூறப்பட்டிருக்கிறது. —தொடரும்.

## ராக்ஷஸன் பாத அடி

### வாலிபன் திகிலால் சுரங்கண்டு இறந்தானும்.

ஒவ்வொரு பாத அடியும் 22 அங்குல நீளமும 11 அங்குல அகலமும் இருக்கிறது. ஸிலிகுரி நகருக்கு அருகேயுள்ள ஜன்மீன் தாரபாரா கிராமத்து வயலில் இந்தப் பாத அடிகளைக் கண்டார்கள்.

அந்தக் கிராமவாசி ஒருவன் ஒரு நாள் திரும்பி வந்துகொண்டிருக்கும்போது மிக உயரமான ஒரு மனித உருவம் வயலில் நடந்துசெல்வதைக் கண்டு பிரமித்து நின்றானும். அந்த ராட்சதன் வாலிபனைக் கைகாட்டி அழைக்கவே வாலிபன் மூர்ச்சித்து விழுந்து விட்டானும். வெகு நேரம் கழித்து எழுந்துகிராமத்துக்கு வந்து தான் கண்டவைகளைச் சொன்னான். அந்த இரவே சுரம் கண்டு மூன்று நாட்களில் அந்தக் கிராமவாசி இறந்துபோனான். கிராமவாசிகள் குறிப்பிட்ட அந்தவயலுக்குச்சென்று பார்த்தபோது காலடிகள் தென்பட்டன. கொஞ்சதூரம் அந்த ராட்சஸன் சென்றபின்பு கட்டாந் தரையிலேறி ஓடிவிட்டானென்பது தெரிந்தது. சில பாத அடிகளை அப்படியே அல்லோடு கடுதாசியில் எடுத்திருக்கிறார்கள். ஊரில் இந்த அபூர்வ மனிதனை ராட்சஸனென்று நினைத்து ஜனங்கள்பீதியடைந்திருக்கின்றனர்,

# 'இளவரசிப் பட்டம் வேண்டாம்'

## வேலைக்காரன்மீது இளவரசி கொண்ட காதல்.

லண்டன் 28—

ஹோட்டலில் வேலைசெய்து வந்த அலெக்டாஸ் மிலோஸ் என்ற ஓர் சாதாரண பேர்வழிக்கு வந்த அதிர்ஷ்டத்தை என்னென்பது? ஈராக்கு மன்னரின் மூத்த சகோதரியாகிய அஸா இளவரசி அலெக்டாஸியைக் காதலித்தாள். இப்பொழுது எவ்வளவோ எதிர்ப்பு ஏற்பட்டும் இவர்கள் மணஞ்செய்துகொண்டுவிட்டார்கள். அஸா இளவரசியின் சகோதரியாகிய ராஜ்சா இளவரசி திருமணத்தை நிறுத்த முயற்சி செய்துபார்த்தாள். தன்னுடைய சகோதரியை மணம் செய்துகொள்ளாமலிருந்தால் லட்சம் பவுண் கொடுப்பதாகவும் அவள் கூறினள் ஆனால் பிரயோஜனம் ஏற்படவில்லை.

### காதல் எப்படி ஏற்பட்டது

அலெக்டாஸியே, இளவரசி தன்னை எவ்வாறு காதலிக்க நேரிட்டதென்பதைப்பற்றிப் பின்வருமாறு கூறினன்:—

"இரு ஈராக் இளவரசிகளும் சென்ற வருடத்தில் ரோட்ஸுக்கு வந்திருந்தார்கள். அவர்களில் ஒருத்தி என்மீது மிகவும் கருணையுடன் கண்ணோட்டம் செலுத்தினள். அஸா இளவரசி ஹோட்டல் தோட்டத்தில் உலாத்தும்போது என்னை அடிக்கடி சந்திப்பது வழக்கம். அப்பொழுது அவள் என்னைப் பார்த்து முறுவல் செய்வாள். நான் வேலைசெய்துவிட்டுவரும் நேரத்தை அவள் உப்பரிகையிலிருந்து எதிர்பார்த்துக்கொண்டிருப்பாள். நான் என்னுடைய நிலைமையையும் அஸா இளவரசியின் நிலைமையையும் எடுத்துக் கூறியிருக்கின்றேன். மதத்தையும் குடும்பத்தையும் எனக்காகத் துறந்துவிடுவதாக அவள் கூறினள் கனவு காண்பதுபோல் அஸா இளவரசி எங்கு சென்றாலும் நான் பின்தொடர்ந்து சென்றேன். ஒரு சமயம் நான் பாக்தாத்துக்கு மாறுவேடத்தில் சென்றேன். கதையை வளர்ப்பானேன். காதல் வெற்றி பெற்றுவிட்டது. எவ்வளவோ எதிர்ப்பு ஏற்பட்டும் பத்திரிகைகள் விபரீதமாக வியாக்கியானம் செய்தும் திருமணம் நடந்தேறிவிட்டது. நாங்கள் சௌக்கியமாக இருக்கின்றோம்"

இச்சமயத்தில் அஸா இளவரசி அறையில் பிரவேசித்தாள். "சாரமற்ற கடுமையான அரண்மனை வாழ்க்கையிலிருந்து தப்புவதற்கு நான் நீண்டகாலமாக அவாக்கொண்டிருந்தேன். இப்பொழுது நான் மிகவும் சுகமாயிருக்கின்றேன். இளவரசி என்ற பட்டம் எனக்கு வேண்டியதில்லை. என்னுடைய கணவர் முன்னர் வேலைசெய்துவந்த ஹோட்டலிலேயே இப்பொழுது விருந்தாளியாகவிருக்கின்றோர் என்று அஸா இளவரசி மிகவும் மகிழ்ச்சியுடன் கூறினள்.

## சீன—ஜப்பானிய ஒப்பந்தம்

லண்டன், 27உ

சீனவுக்கும் ஜெர்மனிக்கு மிடையே ஓர் இரகசிய ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக பரவிவரும் தகவல்கள் டோக்கியோவில் மிகுந்த பரபரப்பைக் கொடுத்திருக்கின்றன. மேற்கூறிய ஒப்பந்தப் பிரகாரம் ஜெர்மனி சீனவுக்கு ஆயுதங்கள் அனுப்பவும், அவற்றிற்குப் பதிலாக சில முக்கியமான மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்ளவும் செய்யும். இதுமாதிரி ஒப்பந்தம் ஏற்படவில்லையென்று ஜெர்மன் விளம்பர மந்திரி கூறுகின்றார்.

# சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் அரிய பணி

### திரு. சு. இராசரத்தினம் அவர்கள் சொற்பொழிவு

## பிறமதத்தார் நடத்தும் பாடசாலைகளில் கற்கும் பெருந்தொகையானமாணவர்கள்

6-6-36 ல் நடந்த சைவ வித்தியா சங்கத் தலைமையாசிரியர் கூட்டத்தில் அக்கிராசனம் வகித்த பிரபல நியாயதுரந்தரரும், மேற்படி சங்க வித்தியாசாலைகளின் முகாமைக் காரருமாகிய ஸ்ரீமான் சு. இராசரத்தினம் அவர்கள சைவப்பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக ஓர் அரிய சொற்பொழிவை நிகழ்த்தினர்கள். அதன் சுருக்கம் கீழே தரப்படுகின்றது.

சைவப் பிள்ளைகளுக்குச் சைவக் கல்வி கற்பிக்க வேண்டியது சைவர்களது முக்கிய கடமையாகும். நமது பிள்ளைகளின் கல்வி விஷயத்தில் புற மதத்தவர்களுக்கு ஒருவித உரிமையுமில்லை; ஆனால் நமது தற்போதைய நிலைமை மிகப் பரிதாபத்திற் கிடனுயிருக்கின்றது.

இலங்கைத்தீவில் புரொடெஸ்டான்ட் மிஷனரிமார் 574 சுதேச பாஷா பாடசாலைகளை வைத்து நடாத்துகின்றனர். அவைகளில் 64360 கிறிஸ்தவரல்லாத பிள்ளைகள் படிக்கின்றார்கள். கிறிஸ்து பிள்ளைகள் தொகை 4290. (அதாவது நாற்றுக்கு 6 விதம்) கத்தோலிக்கர்கள் 514 சுதேசபாஷா பாடசாலைகள் நடாத்துகின்றனர். அவைகளில் 72362 பிள்ளைகள் படிக்கின்றார்கள். இத்தொகையில் 28872 பிள்ளைகள் கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்தவர்கள். (39.9 விதம்)

புரொடெஸ்டான்ட் மிஷனரிமார் 98 ஆங்கில துவிபாஷா பள்ளிக்கூடங்கள்நடாத்துகின்றனர். அவைகளிற் படிக்கும் பிள்ளைகள் தொகை 60444. இத்தொகையில் 18463 பிள்ளைகள்தான் கிறிஸ்தவர்கள். (35 விதம்) கத்தோலிக்கர்கள் 88 துவிபாஷா ஆங்கில பள்ளிக்கூடங்களை நடாத்துகின்றனர். அவைகளில் படிக்கும் பிள்ளைகள் தொகை 22377. இத்தொகையில் 14814 பிள்ளைகள்தான் கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்தவர்கள்.

ஆகவே கிறிஸ்த சுதேசபாஷா பள்ளிக் கூடங்களில் 102362 கிறிஸ்தவர்களல்லாதவர்களும், கிறிஸ்த ஆங்கில துவிபாஷா பள்ளிக் கூடங்களில் 49544 கிறிஸ்தவர்களல்லாதவர்களும் கல்வி கற்கின்றனர். ஆகவே ஏறக்குறைய 152000 கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களும் 43696 கிறிஸ்தவர்களும் கிறிஸ்த பள்ளிக்கூடங்களில் கல்வி கற்கின்றனர். கிறிஸ்தவர்கள் அல்லாத பிள்ளைகள் கிறிஸ்த பள்ளிக்கூடங்களிற் படிப்பதனால் தங்கள் சமயத்தையும் நாகரீகத்தையும் இழந்து விடுகின்றனர். ஆகையால் கிறிஸ்தவர்களல்லாதவர்கள் தங்கள் பிள்ளைகளைத் தங்கள் மதத்தினரால் நடத்தப்படும் பள்ளிக் கூடங்களுக்கே அனுப்ப வேண்டும்.

கிறிஸ்தவரல்லாதவர்களது சமயம் கிறிஸ்த பள்ளிக் கூடங்களிற் போதிக்கப் படுகிறதில்லை யென்பதும், அவர்கள் தங்கள் சமயத்தை வெறுக்கச் செய்கிறார்களென்பதும் கடைசியில் கிறிஸ்த சமயத்துக்குத் திருப்பிக் கொள்ளுகிறார்களென்பதும் யாவரும் அறிந்ததொன்றே. பிள்ளைகளுக்கு ஒருவித கெடுதியும் நேராதவாறு காப்பது பெற்றோர் கடனாகும். புத்தர்கள் கேணல் ஒல்கொற் என்பவருடைய முயற்சியால் புத்த தத்துவ சங்கம் ஒன்றைத் தொடங்கிப் புத்தசமய வளர்ச்சியை முன்னிட்டுப் பல வேலைகளைச் செய்கிறார்கள், இந்துக்களும் ஆறுமுகநாவலர் அவர்களும் பிறரும் செய்த அரிய முயற்சிகளால் சைவக் கல்வியை வளரச் செய்ய முன்வந்துள்ளார். ஆறுமுகநாவலர் முதலியோர் செய்யத் தொடங்கிய வேலையை இதுபோழ்து சைவவித்தியா விருத்திச் சங்கம் செய்து வருகிறது. உயர்ந்த நோக்கமுள்ள சைவர்களது ஒத்துழைப்பால் சைவவித்தியா விருத்திச் சங்கம் காலடைவில் முன்னேற்றம் அடைந்து வருகிறது. அது சைவ ஸ்தாபனங்களுள் முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கிறது. இப்போது அச் சங்கம் 80 பள்ளிக்கூடங்களை நடத்துகின்றது. அப்பள்ளிக்கூடங்களில 450 உபாத்தியார்கள் 12000 பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கின்றனர். வருடாவருடம் அரசினரிடமிருந்து இரண்டரை லட்சம் ரூபா உதவி நன்கொடையாகக் கிடைக்கின்றது. சைவ வித்தியா விருத்திச் சங்கம் நடத்தும் பள்ளிக்கூடங்களுட் திருநெல்வேலிச் சைவாசிரியர் கலாசாலை முக்கியமானது. மேலும் 80 பிள்ளைகள் படிக்கும் அநாத பாடசாலையொன்றும், ஆங்கில வித்தியாசாலைகள் இரண்டும், இலவச துவிபாஷா பாடசாலைகள் ஆறும் மேற்படி சங்கத்தின் ஆதரவின் கீழ் நடைபெறுகின்றன.

மேற்கூறிய 80 பள்ளிக்கூடங்களில் 67 பள்ளிக்கூடங்கள் பதியப் பெற்றுள்ளன. 13 பள்ளிக் கூடங்கள் பதியப்படாதன. பதியப் பெறாதன விரைவிற் பதியப்படும். இந்துசமயப் பிள்ளைகள் எல்லோரும் இந்துப் பள்ளிக் கூடங்களில் படிக்க வசதி ஏற்படுங் காலம் வரைக்கும் இந்துக்களுக்கு அதிகம வேலை இருக்கின்றது.

சைவ வித்தியாவிருத்திச்சங்கம் பெண்களுக்கு அநாத பாடசாலை ஒன்றையும், யாழ்ப்பாணப் பட்டினத்தில் பெண்களுக்கெனக் கல்லூரி ஒன்றையும், இன்னும் பல புதுப் பள்ளிக் கூடங்களையும் தொடங்க உத்தேசித்திருக்கிறது.

## மாங்காய் விலையால் வந்தவினை.

### எதிரிகள் பிணையில் விடப்பட்டனர்.

திரிகோணமலை 28

"எச். எம். ஐ. எஸ். இந்தஸ்" கப்பலைச்சேர்ந்த இரு இந்திய மாலுமிகள் திரிகோணமலை காய்கறி மார்க்கெட்டில் ஓர் மாங்காய் விலை விசாரிக்கும்போது நடந்த செவ்வாய்க்கிழமையன்று கடைக்காரருக்கும் மாலுமிகளுக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. வியாபாரி சில தூஷணவார்த்தை உபயோகித்ததாகவும் மாலுமிகள் கோபமடைந்து அவரைப்பார்த்து பூட்ஸால் அடிப்பதாகக் கூறினதாகவும் உடனே மற்ற வியாபாரிகள் ஒன்றுசேர்ந்து மாலுமிகளை வாழைநாராலும் தேங்காய்களாலும் தாக்கியதாகவும் மாலுமிகள் உயிருக்குப் பயந்து ஓட்டம்பிடித்ததாகவும் கூறப்படுகிறது. அன்று தினம் போலிசார் விசாரணைசெய்து ஓர் வியாபாரியைக் கைதுசெய்தார்கள். அவர் பிணையில் விடுதலைசெய்யப்பட்டார். இதுசம்பந்தமாகப் பொலிசார் நேற்றும் 3 பேர்களைக் கைதுசெய்து பொலிஸ் நீதிபதி முன் ஆஜர்செய்தனர். அவர்களும் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

## உலகம் பலவிதம்.

(முற்றொடர்.)

"ஏ, தாய்! இப்பொழுது தான் என் ஞாபகத்திற்கு வந்தது; கைலாசத்திலே பதின்மூன்று பதினறு வயதுப் பராயமுள்ள ஒரு பெண் பொன்னால் வெள்ளியால ஆனகுச்சி காணுமில்லாமல், ஒரு அழுக்குத் துணியுடன், திராக்கவலையோடுகொண்டிருக்கக்கண்டேன்; பார்த்தவுடன் எனக்கே பரிதாபமாக இருந்தது! குழந்தாய் உன்பெயரென்ன பிள்ளாய்? என்று கேட்டேன், பெயர் பங்கஜம் என்று சொல்லிவிட்டு அழுதுகொண்டு அப்பால் போய்விட்டாள்; கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்; துறவிக்கு இந்த விசாரணை யெல்லாம் எதற்கு என்று சொல்லிக்கொண்டு நானும் அப்பால் போய்விட்டேன்; ஒருபோது அவள் உங்கள் மகளாயிருந்தால் கூடுமோ என்று சந்தேகப்படுகிறேன்" எனக் கூறி முடித்தான் அந்தப் போலிச் சந்நியாசி.

* * *

"ஐயோ, சுவாமி! அவள்தான் எங்கள் அருமைக் குழந்தை; ஆ! கண்ணே பங்கஜா! அந்த நிலைமையிலோ நீ அங்கே அலைந்து திரிகின்றாய்! உன் அப்பர் அங்கே க்ஷேமமாக இருக்கின்றாய்; இங்கே வருவாயென்றல்லவோ சொல்லி இதுவரையில் என்னை ஏமாற்றிவிட்டார்! சரி, சரி, அவர் இப்படியெல்லாம் என்னை அனுப்பிவரும் உபாயம் இப்போது தான் எனக்குப் புலப்படுகிறது; உனக்கென்று தேடி வைத்த பொருள் பண்டம், செய்வித்துவைத்த நகைவகை, வாங்கிவைத்த சேலை துணி யெல்லாவற்றையும் இன்னமும் தாம் வைத்துக்கொள்ள நினைத்துத் தான் இப்படிச் செய்கிறார்; பிதா பிள்ளைக்கு இப்படிச் செய்யலாமா? வேலி பயிரை மேய நினைத்தாற் செய்வதென்ன? என் பிள்ளைக்கு உதவாப்பொருள் இங்கே யாருக்கு இருக்கட்டும்? அவர் வருவதற்குமுன் இந்தப் பொருள்களெல்லாம் என் பிள்ளையிடஞ் சேர வழிதேடி விடுகிறேன்" என்று தன்னளவில் நிச்சயித்துக்கொண்டு பறுவதம சந்நியாசியைப் பார்த்து "சுவாமி! எனக்கு ஒரு சின்ன உதவி செய்யவொண்ணதா? என்று பரிவுடன் கேட்டாள். "அம்மா! என்னால் இயலுமானாற் செய்கிறேன்" என்று சந்நியாசி சொல்ல, பறுவதம் "ஐயா பெரியவரே! உமக்குப் புண்ணியங் கிடைக்கும்; இது ஒன்றை மாத்திரஞ் செய்துவிடும்; என்பிள்ளைக்குரிய நகைவகை, புடவை துணி, பணம் இவைகளெல்லாவற்றையும் நான பக்குவமாகக் கட்டித் தருகிறேன்; கொண்டுபோய் என் பிள்ளை வசம் ஒப்புவித்து உன் அம்மா இவைகளை உனக்குத்தந்தாள்; ஏற்றுக்கொள் என்று சொல்லிக் கொடுத்துவிட்டு என்னுடைய சுகத்தையும் என் பிள்ளைக்குச்சொல்லி, நீர் மீண்டும் இங்கே வரும்போது அவளுடைய சுகத்தையும் கேட்டுக்கொண்டுவந்து சொல்லவேணும்; நான் பெண்ணாய்ப்பிறந்தவள்; தனித்தவள், எனக்கு வேறு உதவியில்லை; நீரே தஞ்சம்; அந்த ஈயாத மனுஷன் வருமுன் இவைகளை அப்புறப்படுத்திக்கொண்டுபோய்ச் சேர்த்துவிடவேண்டும்" என்று சொல்லிக் குறையிரந்து சந்நியாசியைக்கும்பிட்டாள்

* * *

பறுவதம் இவைகளைச் சொல்லி முடிக்கும் வரையில் மௌனஞ் சாதித்துக்கொண்டிருந்த தபோதனர் பெருமூச்சுவிட்டு, காதின்மேற் கையை வைத்து, சிவ சிவ என்று உச்சரித்து, "அம்மா, தாயே, நீர் இந்தக் கேள்வி கேட்கலாமா? நாம் துறவியல்லவா! ஓடும் பொன்னும் ஒப்ப நோக்கும் எம்மை இப்படிச் செய்யச் சொல்லுதல் உமக்கு அடுக்குமா? நாங்கள் பொன்னை வெள்ளியைப் பட்டைப் பணியைத் தீண்டினாலும் தோஷமுண்டென்று வேதஞ் சொல்லுகிறதே; இந்த ஒரு கேள்வியை மாத்திரம் விட்டு வேறு என்ன சொன்னாலுஞ் செய்வேன், ஆனால் உம்முடை சொல்லைத் தட்டவும் எனக்கு மனம் எழவில்லையே; இதற்கென் செய்வேன! இருதலைக்கொள்ளி யெறும்புபோல

## பெண்சோர வழக்கு

### எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்றனர்

பாணந்துறை, ஜூன். 29

பாணந்துறையைச்சேர்ந்த சே. சி தாமி யென்னும் ஓர் பதினைந்து வயதுப்பெண்ணை சென்ற 20-ம் தேதியன்று தவளுடைய எசமானின் வீட்டிலிருந்து கடத்திச்சென்றதாக பீட்டர் ரோமியல் பெர்னாண்டோ என்னும் மொறட்டுவை வாசிகளிருவரையும் குற்றஞ்சாட்டிப் பாணந்துறைப் பொலீஸ் நீதிபதி முன்னிலையில் இன்று ஓர் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

விசாரணையின்பொழுது சோமி காமி தெரிவித்ததாவது:—

சென்ற 20-ம் தேதியன்றிரவு பீட்டர் என்பவர் என்னை எனது எசமானின் வீட்டிலிருந்து ஓர் காலி வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அங்கு அவர் என்னை இம்சித்தார் பொழுது புலர்ந்தவுடன் அவரைக்காண முடியவில்லை நான் அறுவை ரயில்வே ஸ்டேஷனை நோக்கி நடந்து சென்றேன். அப்பொழுது ரோமியல் என்பவர் என்னைச் சந்தித்து எனக்கு உத்தியோகமளிப்பதாக வாக்களித்து உடன் அழைத்துச்சென்றார். அவர் தமது பந்து ஒருவரின் வீட்டிற்கும் மற்றும் பலவீடுகளுக்கும் என்னையழைத்துச்சென்றார். பிறகுதான் பொலிசார் வந்தார்கள்.

நீதிபதி:- சம்மதத்துடன் சென்ற ஒரு பெண்ணை ஒருவன் அழைத்துச்சென்றுவிட்டால் அதைப் பெண் கடத்தென்று சொல்லிவிடலாமா?

திரு. ஈ ஆர். பி. குணதிலக (மறுத்தார் தரப்பில்) ஒரு மைனர்ப் பெண். எனவே இது பெண் கடத்துத்தான்.

திரு ஸ்டெம்போ:- (எதிரி தரப்பில்) சம்மதவில் ஒரு அனாதைப் பெண்ணை ஒருவாலிபன்கண்டால் அவன் என்ன செய்வானே அதைத்தான் ரோமியலும் செய்தார்.

நீதிபதி:- நான் அப்படிச்செய்திருக்கமாட்டேன். (சிரிப்பு)

எதிரிகள் குற்றவாளிகளல்லவென்று விவாதித்தமையால் விசாரணை ஜூலை 2-ம் தேதிக்கு நிறுத்திவைக்கப்பட்டது. எதிரிகளை 200 ரூபாய் ஜாமீனையில் விடுதலைசெய்ய நீதிபதி சம்மதித்தார்.

லானேனே! ஈசா, இதவும் உன் சோதனையா" என்று கவலைப்பட்டார்.

* * *

"சுவாமி, அதனுல் ஒரு தோஷமும் வராது; ஏழைகளுக்கு உதவி செய்வதுதானே பெரியவர் கடமை, பிள்ளையின் தகப்பனர் வந்துவிட்டால் என்னெண்ணம் கைகூடப் போவதில்லை; புண்ணியவானே பெரிய மனுசபண்ணி இந்த ஒரு உபகாரத்தை மாத்திரம் செய்துவிடும்; இவைகளை வேறெவரிடத்திலேனும் கொடுத்தால் அவர்கள் என் பிள்ளைக்குக் கொடாமல் தாமே அபகரித்துக் கொள்ளுவார்கள்; உமக்குக் கோடி புண்ணியமுண்டு; இந்த ஒரு உதவியையும் சுவாமீ, என்பொருட்டுச் செய்யத்தான் வேண்டும்" என்று பின்னரும் வேண்டினள் பறுவதம். "ஆம்! ஆம்! எல்லாம் ஈசன் செயலே, தாய் உன்விருப்பத்தின்படி செய்கிறேன்; அதிகம் தந்துவிட வேண்டாம்; சில பொருள்களை மாத்திரம் எடுத்துச் சிறிய பொதியாகக் கட்டித் தந்துவிடு, நான் கொண்டுபோய் அந்தப் பிள்ளையிடம் கொடுக்கிறேன்" என்று சொல்லி ஒருவாறு உடன்பட்டார சந்நியாசி பறுவதம் தன் புருஷன் வந்துவிடப் போகின்றானென்ற ஏக்கத்தினால் கால்மணிநேரத்துள் தன் மகளுக்கென வைக்கப்பட்டிருந்த ஆடையாபரணங்களை யெல்லாம் எடுத்துத் திரட்டிப் பொதிந்து ஒரு பொதியாகக் கட்டிச் சுவாமியாரிடம் கொடுத்து அவரைச் சீக்கிரமாக வீட்டைவிட்டுப் புறப்பட்டுப்போகும்படி கேட்க, அவரும் அதற்கிசைந்து பொதியுடன் விரைந்து புறப்பட்டுப் போனார். கள்ளச்சந்நியாசி போய் கால்மணி நேரஞ் செல்வதற்கிடையில் இராமசாமிப்பிள்ளையுந் தம் வீட்டிற்கு மீண்டுவந்தார்.

(வரும்.)

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாம் அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இ ந் து சா த னம்.

யாழ்ப்பாணம்: தாதுஃ
ஆனிமீ கசுஉ வியாழக்கிழமை

## சர்வதேசசங்கத்தின் வீழ்ச்சி

எப்போது சர்வதேசங்கம் அபிஸீனியாவிற்கு மாறாக எழுந்த முஸோலினியின் யுத்த முயற்சியைத் தடுத்து உலக சமாதானத்தை நிறுவத் தவறியதோ அப்போது தொடக்கமாக இந்தச் சர்வதேசசங்கம் தன் அதிகாரங் குன்றி வீழத் தொடங்கியதெனலாம். சர்வதேசசங்கத்தின் கேள்வியேதற்கும் முஸோலினி இடங்கொடுக்கவில்லை; அதன் கட்டுப்பாடு எதற்கும் இத்தலிய சர்வாதிகாரி அடங்கவில்லை. அச் சர்வாதிகாரி தம்முடைய படைவலியினால் அபிஸீனியாவை வென்று கைப்பற்றினர் அவர் செயலைத் தடுக்கவேண்டுமேல் சர்வதேசசங்கத்திற் சேர்ந்த (இப்பொழுது தத்துவமற்ற) இராச்சியங்களும் ஆயுத வலிகொண்டே அதனை அடக்கவேண்டும். முள்ளை முள்ளால் எடு என்பது பழமொழி. இந்த இரகசியத்தைச் சர்வதேசசங்கத்திற் சம்பந்தப்பட்ட அரசினர் அறியாமலிருக்கவில்லை. படைவலிகொண்டு இத்தலியை அடக்கத் தொடங்கினால், இச்சங்கத்திற் சேராத இராச்சியங்கள் இவைகளுள்ளும் ஜர்மனி இத்தலியோடு சேர்ந்துவிட, பழையபடி உலக மாகா யுத்தமொன்று நேருமென்றே இராச தந்திரிகள் எவரும் அஞ்சுகின்றனர்.

சர்வதேச சங்கத்திற் பிரான்ஸியா இருமனதாக நிற்க, பிருத்தானியரே இயன்றவரையில் நீதிசெய்யவேண்டுமென்ற எண்ணத்தோடு முயற்சி செய்தனரென்பது மெய். இதனால் அவர்கள் தங்கள் அந்நியநாட்டு விவகார மந்திரியாகவிருந்த ஸேர் சாமுவல் ஹோர் என்பவரையும் அந்தச் சமயத்திலே தமது பதவியினின்றும் விலகச் செய்தனர். ஆனால் இப்பொழுது அந்தக் ஹோர் என்பவரே பழையபடி தமது மந்திரிப்பதவியை வகித்துக் கொண்டார்; இதனால் பிருத்தானியரும் "நிலையிற் பிரியேல்" என்பதை மறந்து நிலை தடுமாறலாயினர். பிருத்தானியர் தமக்கு விசேஷ துணை செய்வரென நம்பி இங்கிலாந்திற்குச் சென்ற அபிஸீனிய பழைய சக்கரவர்த்தி தமது கேவல நிலைமையை லண்டன் பட்டினத்தில் நிற்கும் போதே உணர்ந்துகொண்டார் அபிஸீனிய சக்கரவர்த்தி பிரதானமாக பிருத்தானியரிடம் அடைக்கலம் புகுந்தது பிழையல்ல. ஏன்? இந்த பிருத்தானியரே அந்தச் சக்கரவர்த்தியை முஸோலினியுடன் மாறுபட்டுச் சமர்செய்யும்படி தூண்டிவிட்டவர்கள். இது உலகம் முழுவதும் உணர்ந்த இரகசியம், காடிழந்த இந்தச் சக்கரவர்த்தி, சமுத்திரத்தில் அமிழ்ந்துபவன் தனது ஆற்றாமையினால் துரும்பு அகப்பட்டாலும் அதனைப் பிடிப்பதுபோல, சர்வதேசசங்கக் கூட்டத்தில் தாம் நேரே சென்று தமக்கு நேர்ந்த குறையைமுறையிட்டு நிற்கின்றார். அவர் சொல்பவை பத்திரிகைகளில் வெளிவருகின்றன ஆறப் படித்துப்பார்க்கப் பரிதாபமாகவேயிருக்கிறது. (அவற்றை அடுத்த பிரசுரத்தில் மொழிபெயர்த்து வெளியிடுவோம்) சக்கரவர்த்தி என்ன சொல்லினும் எப்படி வாதிப்பினும் ஆகப்போவது யாதுமில்லை. எங்ஙனமாயினும் பிருத்தானியராக, சர்வதேசசங்கத்திற் சேர்ந்த எந்த அரசினராக, அபிஸீனிய சக்கரவர்த்திக்குச் செய்த நம்பிக்கைத் துரோகத்தைக் காலகதியில் அநுபவிக்கவேண்டியே வருமென்பது திண்ணம். இப்பொழுது இந்தத் தத்துவ ராச்சியங்களெல்லாம் முஸோலினிக்கு அடங்கலாயின முஸோலினியை இவர்கள் அடக்கும் வரையில் இவர்களுக்குச் சுவாதீனம் இல்லையெனலாம்.

இதற்கிடையில், அயிரோப்பிய தத்துவ ராச்சியங்களெல்லாம் ஒன்று கூட்டி ஐக்கியப்பட்டுக் கீழ் நாட்டவரைக் கறுத்தவர்களை அடக்கலாகுமோ என்று உபாயஞ் சூழ்கின்றனர். இந்த உபாயமும் பலிக்கப்போவதில்லை. காரணமென்ன? பலஸ்தீனிலே அராபியர் தொடங்கிச் செய்துவரும் கலகம் சாமானியமான கலகமல்ல அந்தக் கலகம் சில அந்தரங்க நோக்கத்தைக் கொண்டதென்றும் அக் கலகக்காரருக்குத் தத்துவராச்சியம் இஸ்லாம் இராச்சியங்களின் துணையுந் தூண்டுதலும் மறைவில் உண்டென்றும் அயிரோப்பிய இராசதந்திரிகளே சந்தேகங்கொண்டு பயப்படுகின்றனர். இஸ்லாமான இராச்சியங்களெல்லாஞ் சேர்ந்து இஸ்லாம் சக்ராதிபத்தியத்தை நிலைநாட்டவேண்டுமென்ற ஒரு முயற்சி முளைத்திருக்கின்றதாம் இது மாத்திரமல்லாமல் ஜப்பானும் சும்மா விருக்கப்போவதில்லை. இவைகளையெல்லாம் ஆலோசிக்குமிடத்து அயிரோப்பிய தத்துவராச்சியங்கள் இதுகாறும் காட்டிய திறமைகளும் அதிதிரங்களும் இனியேற் பயன்படாவென்பது யூகிக்கக் கிடக்கின்றது. எதனையும் இருந்து பார்ப்போம்.

## அராபியரின் அபிமானம்

பாலஸ்தினத்தின் நிலைமை நாளுக்கு நாள் அதிக நெருக்கடியான நிலைமையாக மாறுகின்றது. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தமது இராணுவத்தை உபயோகித்தேனும் கலகத்தை அடக்குவதற்கு ஆயத்தமாக இருக்கின்றனரெனக் குடியேற்ற நாட்டு மந்திரி பூச்சாண்டி காட்டினர். அதனை அராபியர் பொருட் படுத்துவதாகத் தெரியவில்லை. எல்லைப் புறத்தில் உள்ள டிரான்ஸ் ஜோர்டனில் வசிக்கும் பெதுான் ஜாதியினரும் இக்கலகத்திற் கலந்து கொள்வார்களோ என்னும் அச்சம் அதிகரித்து வருகிறது. 20 ஷெயிக்குகள்வரை அந்நிய ராட்சியைப் போக்குதற்காகப் பாலஸ்தீன அராபியருடன் சேர்ந்து போர்புரியலாமா என்று ஆலோசனை சொல்கின்றனராம். ஆயின், இவர்கள் பெரும்பாலும் டிரான்ஸ்ஜோர்டனிலுள்ள அமீர் அப்துல்லா என்பவர் கூறும் புத்திமதியைக் கேட்டே நடந்து கொள்வார்களெனத் தெரிகிறது. அமீர் அப்துல்லா 1000 பேர் வீரரைக் கொண்ட ஒரு சிறந்த படைக்குத் தலைவர். அஞ்சா நெஞ்சமுள்ளவர். 1921-ம் ஆண்டில் இவர் ஸீரியாவில் பிரஞ்சு ஆதிக்கத்தைப் போக்குதற்காக மிக உக்கிரமாகக் கிளம்பினர். அப்போது பாலஸ்தினத்திற் குடியேற்றநாட்டு மந்திரியாக விருந்த மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் அவரை ஒருவிதமாகச் சமாதானப்படுத்தி விட்டார். தகதிரமாக அவருக்கு டிரான்ஸ ஜோர்டன் அளிக்கப் பெற்றது. அப்துல்லா அதற்கு அமீராகவும் ஆக்கப் பெற்றார். அதன நிர்வாகத்திற்காக ஆண்டுதோறும் 60000 பவுனும் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் உதவப் பெற்று வருகின்றது. தவிர, அமீரது ஆட்சிக் குட்பட்ட இடத்தில் யூதர்களைக் குடியேறவிடுவதில்லையென்றும் வாக்களிக்கப் பெற்றது. பாலஸ்தீன அராபியருக்கும் இவ்விடத்திலுள்ள அராபியருக்கும் இடையே அதிக சிநேகபான்மை இல்லை. எனினும், நிலைமை மிக நெருக்கடியாக மாறும் இச் சமயத்தில் தமது சாதியார் மீது இவர்களுக்கு அநுதாபம் ஏற்பட மாட்டாதோ என்பதே கேள்வி. சாதியபிமானம் கிளம்பிவிடுமாயின் அவ்வுணர்ச்சியத்தால் அமீர் ஆட்சியி லுள்ளவர்களும் பாலஸ்தீன அராபியர்க்கு உதவிபுரிய முன்வந்து விடுதல் கூடும். மானங் காரணமாகப் போர் புரியத் தொடங்குவோர்க்கு உயிர் வாழுதல் ஒரு பொருளாகுமா? இவ்வாறே அராபியருக்கு அராபியர் உதவி புரிய வேண்டும் என்னும் உணர்ச்சி பரவிவிடுமாயின் சுற்றுப்பக்கங்களில் உள்ள அராபியர் முழுப்பேரும் தமது உயிர்களையுந் திரணமாக மதித்துப் போருக்கு எழுவார்கள் என்பது கூறுதே போதரும். ஆகவே இவ்வாறு ஒற்றுமையான வளர்ச்சி எழாதவாறு தடுப்பதற்காகப் பிரிட்டிஷார் தம்மாலானவரை பலவேறு சூழ்ச்சிகளையும் அடக்கு முறைகளையுங்கையாளுவார் என்பதும் சொல்லவேண்டியதில்லை. அராபியர் மிக்க ஒற்றுமை உடையவர்களல்லர். தேசாபிமானமும் அவர்கள்பால மிக உக்கிரமாக உண்டு என்று சொல்வதற்கில்லை. ஆகவே அபிஸீனியரைப் போல ஒற்றுமையின்மை காரணமாக, இவர்கள் எளிதில் தோல்வியடையவுங் கூடும். இவர்களது இப் பெலவீனத்தை அறிந்தே பிரிட்டிஷ் அரசாங்கமும அடக்கு முறையில் இறங்கியிருக்கின்றது. ஆதலின், அராபியர், தம்முள் உள்ள வேற்றுமைகளை எல்லாம் அறவே ஒழித்துப் பிரிட்டிஷாரது சூழ்ச்சிகளுக்குள் அகப்படாமல் ஒற்றுமையாக நின்று கருமமாற்றில் மாத்திரமே அவர்கள் தமது சுதந்தரத்தைக் காப்பாற்ற முடியும். அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பதன்றோ பழமொழி. அராபியர் அங்ஙனம் ஒற்றுமையோடு நின்று புத்திசாலித் தனமாகக் கருமம் ஆற்றுவாரா என்பதே கேள்வி.

# அரசாங்கசபைத் தலைவருக்கு வரவேற்பு

### பல பெருமக்களின் விரிவுரைகள்

### திரு. பண்டார நாயகாவின் உபதேசம்

### "துருவி ஆராய்வோமாயின் சிங்களர் தமிழருக்கிடையேயுள்ள வேற்றுமை அதிகமல்ல"

[நமது விசேஷ நிருபர்]

நமது பத்திரிகையின் சென்ற இதழிற் குறிப்பிட்டவாறு, சென்ற திங்கட்கிழமையன்று மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் முற்ற வெளியிலுள்ள யூனைடெட் கிளப் மண்டபத்தில் அரசாங்கசபைத் தலைவர் திரு. வை. துரைசுவாமி அவர்களுக்கு ஒரு வரவேற்புக்கூட்டம் நடைபெற்றது. கிளப் முன்றில் மிக அழகாக அலங்கரிக்கப்பெற்றிருந்தது யாழ்ப்பாணத்தின் நானுபக்கங்களையுஞ் சேர்ந்த ஆயிரக்கணக்கான ஆடவரும்மகளிரும கூட்டத்திற்குச் சமுகமளித்திருந்தனர்; இவர்களில் ஐவர் அரசாங்கசபை அங்கத்தவர்கள்.

திரு. வை. துரைசுவாமி அவர்கள் தமது புத்திரர் இருவரோடு புதல்வியர் இருவரோடும் வந்து சேர்ந்தார். வரவேற்புக்கழகத் தலைவர் டாக்டர் ஐசக் தம்பையா அவர்கள் அவரை வரவேற்றனர். வரவேற்பு முகத்தால் அவர் கூறியதாவது:—

"திரு. துரைசுவாமி அவர்களை அரசாங்க சபை அங்கத்தவர்கள் தமது தலைவராகத் தெரிவு செய்யப்பட்டமை பற்றி நடக்கும் முதலாவது அகிலயாழ்ப்பாண பொதுஜனக் கூட்டம் இதுவேயாகும். இதற்கு முன் நடைபெற்ற ஒரு வரவேற்புக் கூட்டம் சிலர் அபிமானங் காரணமாகத் தாமே செய்துகொண்டதன்றிப் பிறிதல்ல. இக்கூட்டம் சம்பந்தமாக அரசாங்கசபை முதல்வர் சர். பரோன் ஜயதிலகா ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

#### சபை முதல்வர் பாராட்டு

அதில், திரு துரைசுவாமி அவர்கள் அரசாங்கசபைத் தலைவர் என்ற முறையில் நடந்து வரும் முறைமையும் அவரது ஆற்றலையும் புத்திசாலித் தனத்தையும் பாரபக்ஷமற்ற தன்மையையும் பாராட்டியிருக்கின்றார் இன்னும் எங்கள் பத்தியில், இலங்கையின் தென்பகுதேயிருந்து வந்திருக்கும் இரு சிங்கள கனவான்களின் சமுகம் பெரிதும் மகிழ்ச்சி பயக்கின்றது. எதிர்காலத்தில் ஒற்றுமைப்பட்ட இலங்கை உண்டாவதற்கு இஃது ஓர் அறிகுறி போலும். சிங்கள மக்களுக்கும் எங்களுக்குமிடையே சிற்சில வேற்றுமைகள் ஏற்பட்டமை உண்மையே. ஆயின் உண்மையில் ஆராய்ந்து பார்க்குமிடத்து, அவ் வேற்றுமைகளை மிகச் சுருக்கி, நாம சிங்களர், தமிழர் என்னும் இருசாதியாரது பொதுநன்மைக்குமாக உழைத்து வருதல் முடியும்"

அரசாங்க அத்துவக்காத் திரு. என். நடேசபை, திரு. துரைசுவாமி அவர்களுக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் படித்துக் கொடுத்தார். அப்பத்திரம் வெள்ளி வேலைப்பாட்டால் அழகுற அமைக்கப் பெற்ற ஓர் குழாய்க்குள் வைத்து அளிக்கப்பெற்றது

#### வேற்றுமை அதிகமல்ல

அடுத்தபடியாக ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. பண்டாரநாயகா பேசினர் அவர், "திரு. துரைசுவாமி அவர்கள் அரசாங்கசபைத் தலைவரானதுடன், இலங்கையில்முதலாவது பிரமுகருமாயினர்" எனக் குறிப்பிட்டார். மேலும் அவர் சொல்லியதாவது:—

துருவி ஆராய்ந்து பார்ப்போமாயின், சிங்களர் தமிழருக்கிடையேயுள்ள வேற்றுமை அதிகமல்ல என்பது நமக்குத் தெரியவரும். இவ் வேற்றுமைகளைப் பாராட்டுவதைவிடுத்து எம் இரு சாதியாருக்கும் பொதுவான, வறுமை கல்வியறிவின்மை, நோய், வேலையில்லாக் கஷ்டம் ஆகியனவற்றைப் போக்குவதிலேயே நாம் கருத்துச் செலுத்தவேண்டும் அவ்விஷயங்களே இப்போது அவசியம் நமது கருத்தை ஈர்த்து நிற்பனவாகும். மேலெழுவாக நாம் கருதிக்கொள்ளும் வேற்றுமைகளை நாம் நுணுகி ஆராயின், அவை மணற்குப்பங்களாகவே இருத்தலைக் காணலாம்.

#### சிங்களவன்என்பதில் விருப்பு

இலங்கையர் என்ற சொல் எனக்கு அதிக விருப்பத்தைத் தருவதைவிட நான் ஒரு சிங்களவன் என்று அழைத்துக்கொள்வதிலேயே எனக்கு அதிக விருப்பம் உண்டு நீங்கள் உங்களைத் தமிழர்கள் என்று அழைத்துக்கொள்வதிலேயே அதிக விருப்பம் கொள்ளுதல் வேண்டுமென்பது என் கருத்து. முழு அநுதாபத்தினாலேயே முழு விளக்கம் ஏற்படும்."

அடுத்த படியாகப் பேசிய செவரண்ட் ஜெ பிக்னல் அவர்கள் திரு. துரைசுவாமி அவர்கள யாழ்ப்பாணக் கல்லூரிப் பழைய மாணவராய் இருந்தவபற்றி, அவர் தலைவராகத் தெரிவு செய்யப் பட்டமை தமக்கு விசேஷ மகிழ்ச்சியை அளித்ததென்றும் அவர் அரசாங்க சபைத் தலைவர் பதவியைப் பூரணதிறமையோடு வகிப்பது மாத்திரமன்றி அந்த ஸ்தானத்திற்கு ஒர் அணியாகவும் விளங்குவார் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அதன்பின், அரசாங்கசபை அங்கத்தவரான திரு ஸ்ரீபால சமரக்கொடி பேசினர். அவர் தெரிவித்ததாவது:-

#### இலங்கையிற் கக்ஷி முறை

தமிழர்கள் தமது குறைகளை எடுத்துச் சொல்லுதல் நீதியேயாகும். தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையே பிளவை ஏற்படுத்துதற்கு வயதின் முதிர்ந்த சிங்களப் பிரமுகர்களே காரணர். யாழ்ப்பாணப் பிரதிநிதிகளிற் சிலரும் அதற்குக் காரணராவர். சர். பி. அருணாசலம் போன்ற பெருமக்களை நினைக்கும் போது நாம் தமிழர்களை விட்டு எக்கருமமும் செய்யமுடியாது என்பது புலப்படும். திரு. துரைசுவாமி அவர்கள் போன்ற விரிந்த நோக்குள்ள இன்னும் சில தமிழர்கள் இருப்பாராயின், எந்த உயர்ந்த பதவியிலும் தமிழர்கள் இடம் பெறுவார்கள் என்றே நான் சொல்லுவேன். திரு. துரைசுவாமி அவர்கள் முன்னேற்றத்தை நாடும் விரிந்த நோக்குள்ள கூட்டத்தைச் சேர்ந்தவர். இக்கூட்டமே இலங்கையிற் கக்ஷி முறையைக் கொண்டுவருதற்கு முயலும் கூட்டமாகும். சிங்களவர்களில் வயது முதிர்ந்தோரது செயல்களைக் கொண்டு இளைஞர்களாயுள்ளாரும் அவ்வித கருத்துடையவர்கள் என்று நீங்கள் கருதிவிடக்கூடாது இப்போதுள்ள அரசாங்கசபையில், சகல வகுப்பினருக்கும் நீதி வழங்கப்பட வேண்டும் என்னும் கருத்துள்ள பல வாலிபர்கள் அங்கத்தவர்களாக இருக்கின்றார்கள்."

அடுத்தபடியாகப் பேசிய திரு. ஜீ. ஜீ பொன்னம்பலம் தாம் திரு. துரைசுவாமி அவர்கள் அரசாங்க சபைத் தலைவராகத் தெரிவு செய்யப்படுதற்கு மாறானவர் என்பது பொய் என்பதை சபையோர் மனத்திற் பசுமரத்தாணிபோற் பதிக்கவிரும்புவதாகத் தெரிவித்தார்.

#### 41 வருட நட்பு

அதன்பின் பேசிய அத்வக்காத் திரு டபிளியூ. ம. நைல்ஸ், தாம் திரு. துரைசுவாமி அவர்களோடு 41 வருஷ காலம் நட்புப்பூண்டிருப்பதாகவும், தாம் அவரிடமிருந்து பல பாடங்களைக் கற்றுக்கொண்டதாகவும் தெரிவித்தார்

#### தலைப்பாகையே சிறந்த தலையணி

அடுத்தபடியாக, திரு. சு நடேச பிள்ளை பேசினர். அவர், இதுகாறும் அரசாங்கசபைத் தலைவர்கள் அணிந்ததுபோன்ற 'கேச அணியை' (Wig) அணிவதை விடுத்துத் திரு. துரைசுவாமி அவர்கள் தமிழர்கள் தலையணியாகிய தலைப்பாகையை அணிந்தமை பற்றித் தாம் பெரிதும் மகிழ்வதாகவும் தலைப்பாகையே உண்மையில் தலைக்கு அழகு பயக்கும் என்றும், திரு பண்டாரநாயகா அவர்கள் சிங்களவர்கள் சிங்களவராகவும தமிழர்கள் தமிழர்களாகவும் இருக்கவேண்டுமென்று சொன்னபோது, தமக்கு ஆங்கில அரசியல் ஞானியாகிய கிளாட்ஸ்டனின் ஞாபகம் வந்ததென்றும், கிளாட்ஸ்டனும் இவ்வாறே இங்கிலீஸ்காரர் இங்கிலீஸ்காரராகவும், ஸ்கொட்ஸ் ஸ்கொட்ஸாகவும், வெல்ஷ் வெல்ஷாகவும் இருக்கவேண்டும் என்றும் கூறும் இயல்புடையவர் என்றும் கூறினர்.

அடுத்தபடியாகப் பேசிய திரு. எஸ் ஓ. கனகரத்தினம், தமிழ் மக்களாகிய தங்களுள் ஒருவர், அரசாங்க சபைத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுக் கௌரவிக்கப்பட்டமை பற்றிக் கீழ்மாகாணத் தமிழர்கள் கொண்டுள்ள மகிழ்ச்சியைத் தாம் தெரிவிப்பதாகக் கூறினர்.

#### தலைவர் பதில்

ஈற்றில் திரு. துரைசுவாமி அவர்கள் எழுந்து தமக்கு அளித்த வரவேற்புக்குப் பதிலிறுக்குமுகத்தாற் பின்வருமாறு பேசினார்:—

அரசாங்கசபையில் தலைவர் பதவி எனது இயல்புக் குணங்களுக்குப் பொருத்தமானதொன்றேயாகும். நான் முதலாவது அரசாங்கசபைக் கூட்டத்திற்குப் போகும்போது திரும்பும்போது ஒரு பரிசுபெற்றே திரும்புவேன் என்று எனது நண்பர்களுக்குத் தெரிவித்துச் சென்றேன் பெரியதொரு சமூகம் மற்றொரு சமூகத்திற்குத் தீங்கு விளைக்கும் என்ற அச்சம எனக்கு இருந்திருக்கவில்லை. நம் இடங்கொடுத்தாலன்றி, எந்த மனிதனுவது, எந்தத் தேசமாவது, எந்தச் சாதியாவது நமக்குத் தீங்கு விளைக்க முடியாது. இன்பமுந் துன்பமும் தான் தாவருமே. ஒருவனது ஆக்கத்திற்கும் வீழ்ச்சிக்கும அவனே காரணன். ஒவ்வொருநிலைமையையுந் தக்கவாறு ஏற்றுக்கொள்ளுதற்கு ஆயத்தமுடையவர்களாயிருப்போமாயின் வடபகு

தொடர்ச்சி 5ம் பக்கம்

# நாகநாத அதிகாரத்திற்குக் குதூகல வரவேற்பு

## வாணவேடிக்கையும் சங்கீதமும்

நேற்றுமாலை கோப்பாய் நாகநாத அதிகாரம் அவர்கள் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்ததும் யாழ்ப்பாணத்திலுள்ள பல பிரமுகர்களும் பல ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் அவரை யாழ்ப்பாணம் ஸ்டேஷனிற் சென்று வரவேற்றனர். நேற்று வழக்கமான கோச்சைத் தக்காட்டிலும் 50 நிமிஷம் பிந்தியே கொழும்பு றெயில் யாழ்ப்பாணம் ஸ்டேஷனை வந்தடைந்தது. றெயில் வந்துசேர்ந்ததும் நாகநாத அதிகாரம் அவர்கள் அத்வக்காத் கனகசபை அவர்களால் மாலையிடப்பெற்று மேளவாத்தியசகிதமாக அழைத்து வரப்பெற்றார். பின் அவர் அங்குவந்து கூடிய நண்பர்களோடு கோப்பாயிலுள்ள தமது இல்லத்திற்குச் சென்றார். கோப்பாய்ச் சந்தியிலிருந்து அவர் மேளவாத்திய சகிதமாகப் பலர் பலவித காட்சிகள் நடிக்கவும், வாண விளையாட்டுகள் நடைபெறவும் ஊர்வலமாக் கொண்டு செல்லப்பட்டார். வழியில் அவருக்குப் பல மாலைகள் சூட்டப்பட்டன. அவரும் அவரோடு சென்ற நண்பர்களும் அவரது இல்லத்தை அடைந்து இளைப்பாறிய பின் நாகநாத அதிகாரம் அவர்கள் அவர்களுக்குத் தமது மனமார்ந்த மகிழ்ச்சியையும் நன்றியறிதலையும் தெரிவித்தனர். இரவு 11 மணியளவில் நண்பர்கள் தத்தம் இல்லம் ஏகினர்.

---

## சுதேச வைத்திய கலாசாலை (COLLEGE OF INDIGENOUS MEDICINE) யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம், சுதேச வைத்திய கலாசாலையில் நடந்த முதலாம்வருட சித்த வைத்திய பரிசைஷ (First Siddha Professional Examination)யிற் கீழ்வரும் மாணவர்கள் சித்தியடைந்திருக்கின்றார்கள்.

1. A. நடராசா (1-ம் பிரிவு)
2. A. V. இராசரத்தினம் (2-ம் பிரிவு)
3. C. பொன்னம்பலம் (2-ம் பிரிவு)
4. M. அருளானந்தம்
5. M. சோமசுந்தரம்
6. T. இராசரத்தினம்.

—கடித.

---

4ம் பக்கத் தொடர்ச்சி

நிதியிலுள்ள எமக்கு ஒருபோதும் ஒரு குறைவும் வராது. எனக்கு இன்று அளிக்கப்பெற்ற நல்வாசிகளெல்லாம் என்னை இன்னும் நல்ல வழியில் இட்டுச்செல்லும். உறுதியை அளிக்கும். மற்றவர்களுக்கும் இவ்வாறே நல்லாசிகளை வழங்குங்கள். அவர்கள் நல்லவர்களாகி விடுவார்கள். தனிப்பட்டவர்களுக்கிடையே மாத்திரமன்று சமூகங்களுக்கிடையேயும் இவ்வாறே நல்லெண்ணங்களை வலுப்படுத்திக் கொள்ளலாம்.

நான் ஒரு யாழ்ப்பாணத் தமிழன் என்பதில் பெருமை அடைகிறேன். ஓர் இலங்கைவாசி என்பதிற் பெருமையடைகின்றேன். அதேபோடும் உண்மையோடும் தமது சாகியத்தாரை முன்னேறச் செய்தல் வேண்டும். இப்போது எனக்குக் கிடைத்துள்ள சிறிய உயர்ச்சியானும் மற்றவர்களுக்குச் சேவை புரிதல் வேண்டும் என்னும் எனது ஆசையாலும் கடவுட் பக்தியாலுமே கிடைத்ததெனக் கூறுவேன். எதிர்கால இலங்கை இளைஞர்களிலேயே தங்கியிருக்கின்றது. இப்போதைய அரசாங்கசபையில் பல இளைஞர்கள் இருக்கின்றார்கள். ஆதலால், நாம் பயப்படவேண்டியதில்லை. வருகிற அரசாங்கசபையில் இன்னும் அதிகமான இளைஞர்கள் வருதல் கூடும். இலங்கையின் எதிர்காலம் மிக நன்றாக இருக்கும் என்பதற்குரிய அறிகுறிகள் காணப்படுகின்றன.

இதனால் வயோதிகர்களைப் பற்றி நான் குறை கூறத்துணியேன். அவர்களும் நல்லவர்களே.

ஈற்றில், வரவேற்புக் கழகக்காரியதரிசிகளுக்கும் பிறர்க்கும் டக்டர் ஐசாக் தம்பையா அவர்கள் நன்றி கூறக் கூட்டம் இனிது நிறைவேறியது.

# விதவை வீட்டிற் கல்லெறி

## "என் எறிகிறாய்?" என்றபோது நெற்றியில் எறி

## மாதின் அபாயகரமான நிலை

[நமது நிருபர்]

வட்டுக்கோட்டை மேற்கில் வயிரமுத்து கைம்பெண் சின்னம்மா என்னும் மாது தனது வீட்டில் தனிமையாக வசித்து வந்தாள். சென்ற ஞாயிற்றுக்கிழமையிரவு 11 மணியளவில் அம்மாது நித்திரை கொள்ளும்போது வீட்டில் யாரோ கல்லெறிந்தனர். மாது உடனே வெளியே வந்து பார்த்தபோது தனது சகோதரனாகிய தம்பிப்பிள்ளை கணபதி என்பவர் கல்லெறிந்துகொண்டு நின்றதைக் கண்டாள். கண்டதும், "என் எறிகிறாய்" என்றுகேட்கவே கணபதி மாதின் நெற்றியில் ஒருகல்லை எறிந்தான். உடனே மாது அறிவுகெட்டு விழுந்தாள். சிறிது களைமாறியதும் மாது விதானை வீட்டிற்குச்சென்று நடந்ததைத் தெரிவித்தாள். விதானை அதைப்பற்றிப் பொருட்படுத்தவேயில்லை. அதன்பின் மாது அங்குள்ள ஒருடக்ரரிடம்சென்றதும் அவர் அம்மாதை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்து சேர்த்தார். அந்த அம்மாது இப்போது அபாயகரமான நிலைமையில் கிடப்பதாகத் தகவல் கிடைத்திருக்கின்றது. பொலிஸ் நீதிபதி அங்கு சென்று இறக்குந் தறுவாயிலுள்ள மாதின் வாக்குமூலத்தை அறிக்கை செய்தார்.

---

### மானிப்பாயில் திருட்டு

மானிப்பாயிலவசிக்கும் முத்துக்குமாரசுவாமி என்பவருடைய வீட்டின்கதவைப் பலவந்தமாகத் திறந்து அங்குள்ள ஓர் (டிரங்குப்பெட்டியை) இரும்புப்பெட்டியை யாரோ களவாகத் தூக்கிச் சென்றதாகத் தகவல் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பொலிஸ் அதிகாரிகள் குறித்த இடத்துக்குச் சென்றனர். அங்கே ஓர் மதவடியில் ஓர் வெறும் டிரங்குப்பெட்டியைக் கண்டெடுத்தனர். அப்பெட்டியைக் குமாரசாமியிடம் காட்டினர். அது தங்களுடையதுதான் என்று அவர் ஒத்துக்கொண்டார். இந்தப்பெட்டி வீட்டிலிருந்தபோது அதனுள் நகைகளும் சேலைகளும் காசுகளுமாக 2400 ரூபா பெறுமதிக்கு இருந்ததாம்.

இத்திருட்டுச் சம்பந்தமாக நவாலியில் வசிக்கும் (1) கந்தன்-சின்னட்டொடியன் (2) கந்தன் கதிர்காமன் ஆகிய இருவரும் சந்தேகத்தின் பேரிற் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இவர்கள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். சென்ற 29-6-36 திங்கட்கிழமை யாழ்ப்பாணம் கோட்டில் நீதிபதி எதிரிகளைக் குற்றஞ்சாட்டிப்போதிய சாட்சியின்மையால் அவர்களுக்கு 250 ரூபா பிணையில் விட்டார். வழக்குத்தவணையிடப்பட்டது.

### பலாக்காய்த் திருடர்மீது வழக்கு

யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் வண்ணார்பண்ணையில் வசிக்கும் செட்சுமணன்செட்டி என்பவன் மூன்று ரூ. விலைமதிக்கப்பட்ட 3 பலாக்காய்களைத் திருநெல்வேலிப் பண்ணையொன்றிலிருந்து களவாடியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டான். இப் பலாக்காய்கள் எதிரியாற் பெரியகடையிலுள்ள வியாபாரிகளில் ஒருத்தியாகிய நாகமுத்து என்பவளுக்கு விலைக்குக் கொடுக்கப்பட்டது. இச் சம்பவம் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது. அறிவிக்கப்பட்டதும் N. பெரியதம்பி எனும் கான்ஸ்டபிள் விசாரித்துப் பலாக்காய்களையும் ஆளையும் கொண்டுவந்து கோட்டில் ஒப்புவித்தார். வழக்குத் தவணையிடப்பட்டிருக்கிறது.

---

### சூதாடும் இடம் வைத்திருந்தோருக்கு 50ரூபா

சென்ற கிழமை யாழ்ப்பாணம் கோட்டில் பெரியகடைக்கணித்தாய் இருக்கும் செம்மாதெருவில் வசிக்கும் காதர் சாகிப் என்பவன் சூதாடுவதற்கு இடம் வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டிக் கோட் சார்ஜன் அம்சாவால் வழக்குத் தொடரப்பட்டான். எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதன்பேரில் நீதிபதி எதிரிக்கு 50ரூபா அபராதம் விதித்தார்.

---

### களவாகக் கஞ்சா அனுப்பிய வழக்கு

யாழ்ப்பாணம் சோனகதெருவில் வசிக்கும் முகம்மது சுல்தான் சேகு அப்துல் காதர் என்னும் முஸ்லிம் அநுராதபுரத்திற்குத் தபாற்கந்தோர் மூலமாக 9 பொதிக் கஞ்சாவைக் களவாக அனுப்பினர் என்று மதுப் பரிசோதகர் பொன்னையாவாற் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கு விசாரிக்கப்பட்டது.

விசாரணை முடிந்ததும் நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக்கண்டு 6 மாதக் கடுங்காவல் மறியலும் 500 ரூபா அபராதமுமெனத் தீர்ப்புக் கூறினர். எதிரி வழக்கை அப்பீல் கோட்டுக்கு அனுப்பண்ணியிருக்கிறார்.

---

# சாவகச்சேரியில் தற்கொலை!

## கயிற்றில் சுருக்கிட்டுக் கொண்ட மாது

### அதிகாலையிற் பிரேதம் கூரையிற் கட்டிய கயிறில் தூங்கக் காணப்பட்டதாம்

சாவகச்சேரியில் ஒரு தற்கொலை நடந்ததாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

தற்கொலை செய்து கொண்ட பெண் சாவகச்சேரியைச் சேர்ந்த சண்முகம் சிவகுரு என்பவரின் பத்தினியாகும். இம்மாது புதன்கிழமை இரவு தூங்கித் தற்கொலை செய்ததாகச் சொல்லப்படுகிறது. நேற்று அதிகாலையிலேயே இது கண்டுபிடிக்கப்பட்டது, பிரேதம் வீட்டின் கூரையிற் கட்டப்பெற்ற ஒரு கயிற்றில் சுருக்கிட்டுத் தூங்கிக்கொண்டிருக்கக் காணப்பட்டதாம்.

### லைசென்ஸில்லாத றிக்ஷாக்காரனுக்கு அபராதம்

சிவியாதெருவில் வசிக்கும் நாகன்-மாதன் என்னும் ஓர் றிக்ஷோக் கூலியை நகரசங்கத்தார் லைசென்ஸ் றிக்ஷோவுக்கு எடுக்காததற்காகக் குற்றஞ் சாட்டி வழக்குத் தொடர்ந்தனர். எதிரி தான் லைசென்ஸ் எடுத்துவிட்டதாயும் அப்பத்திரத்தைக் கொண்டுவரத் தவறிவிட்டதாயும் கூறினர். நீதிபதி எதிரிக்கு ரூபா 7-50 சதம் அபராதம் விதித்தார்.

# பிரிட்டனுக்கு விஜயஞ் செய்தோர்

## சென்றவருஷத்தில் ஏராளமாக விஜயஞ்செய்தனர்

லண்டன், 28உ

இவ்வருடத்தில் பிரிட்டனுக்கு விஜயம்செய்துள்ள அந்நியநாட்டு மக்களைப்பற்றிப் பிரயாணிகள் சங்கத்தார் ருசிகரமான விபரங்களை வெளியிட்டிருக்கின்றார்கள். சென்ற வருடத்தைப் பார்க்கிலும் இவ்வருடத்தின் ஒவ்வொரு மாதத்திலும் பிரிட்டனுக்கு அதிகமாகவே அந்நிய நாட்டினர் விஜயம் செய்திருக்கின்றார்கள். சென்ற வருடத்தில் ஜியார்ஜ் மன்னரின் வெள்ளி விழாவை முன்னிட்டு ஏராளமாக ஜனங்கள் பிரிட்டனுக்கு விஜயம் செய்திருந்தார்கள். அப்படியிருந்தும் சென்ற வருடத்தைப் பார்க்கிலும் இவ்வருடத்தில் அதிகமாகவே அந்நிய நாட்டினர் விஜயம் செய்திருக்கின்றனர். சென்ற மாதத்தில் மாத்திரம் 20,203 அந்நிய நாட்டினர் இங்கிலாந்தில் விடுமுறையைக் கழித்திருக்கின்றார்கள். 1935-ம் வருடம் மே மாதத்தில் 18747 அந்நியர்கள் தான் பிரிட்டனில் விடுமுறையைக் கழித்தார்கள். இந்த விபரங்களில் பிரான்ஸிலிருந்தும் பெல்ஜியத்திலிருந்தும் பிரிட்டனுக்கு வருபவர்களின் தொகை சேர்க்கப்படவில்லை. பாஸ்போர்ட் இல்லாமல் போகவர டிக்கட் வாங்கிக்கொண்டு பிரிட்டனுக்கு விஜயம் செய்தவர்களின் தொகை 51,677 ஆகும். இந்தத் தொகை சென்ற ஆண்டைப் பார்க்கிலும் 100க்கு 40வீதம் அதிகமாம்.

---

## பூசை அறையில் ஆச்சரியம்

### கிருஷ்ணன் திருவடிச் சுவடு தென்பட்டதாம்

பகராத், ஜூன் 25—

டாக்டர் பார்வதி சரண் தத்த என்பவருடைய மனைவி பூசை அறையில் பூசை செய்து கொண்டிருக்கும்பொழுது ராதாகிருஷ்ண விக்ரகத்துக்கெதிரே ஆசனத்தில் இரண்டு அங்குல நீளமுள்ள அடிச்சுவடு ஒன்றைக் கண்டனராம். அவ்வடிச்சுவடு இன்னும் நன்றாகத் தெரிகிறது. இது பாலகோபாலன் திருவடிச்சுவடென்று ஜனங்கள் கூட்டங்கூட்டமாகச் சென்று தரிசித்து வருகின்றனரென்று தெரியவருகிறது.

---

### விவாகம்

கந்தையா — சிவபாக்கியம்

செயின்பட்ரிக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமை பார்ப்பவரும் புரக்டர் திரு. சி. டி. கந்தையா அவர்கள் புதல்வருமாகிய திரு என் கந்தையா அவர்களுக்கும் கொழும்புத்துறை திரு. நடராஜா அவர்களின் புத்திரி செல்வி சிவபாக்கியத்திற்கும் நேற்று மாலை 7-30 மணியளவில் மணமகளில்லத்தில் விவாகம் இனிது நிறைவேறியது. மணமக்கள் சகல பேறுகளும் பெற்று இனிது வாழுதற்கு இறைவன் கருணை பாலிப்பாராக.

---

### முசோலினியின் மகள்.

அன்னுமேரியாவுக்கு அசௌக்கியம்

ரோமாபுரி, ஜூன் 29.

முசோலினியின் கடைசி மகளாகிய 6 வயதுள்ள அன்னு மேரியா அசௌக்கியமாக இருக்கின்றாள். இது காரணமாக முசோலினியும் அவருடைய குடும்பத்தாரும் ரோமாபுரிக்குச் சமீபத்திலுள்ள காட்டுப்புற மாளிகையில் அன்னு மேரியாவின் படுக்கையைச் சுற்றிக் கூடிவிட்டார்கள்.

---


### தேவை

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரசங்கத்தின் கடைக்கு வியாபாரத்தில் அனுபவப்பட்ட ஓர் மானேஜர் தேவை. பிணை ரூபா 10000-00 பதினாயிரம் பணம் அல்லது ஆதனம். வருகிற ஆடிமாசம் 20-ம் தேதிக்குமுன் காரியதரிசி அவர்களுக்கு தங்கள் அனுபவப்பத்திரங்களுடனும் சம்பளவிபரத்துடனும் மனுப்பத்திரமனுப்பவேண்டும்.

V. M. Veyagesan,
Secretary,
Jaffna Co-operative Stores Ltd.
Jaffna

Mis 68 2 - 7 to 9 - 7 - 36.


# "பெண்களுக்கு நாணமென்பதே இல்லை"

## ஜப்பான் நிபுணர் கருத்து

டோக்கியோ, 28உ

உலகமுழுவதும் சுற்றுப் பயணம் செய்து விட்டுத் திரும்பிய ஜப்பான் சினிமா நிபுணர் திரு. இச்சிலோ கோபயாஷி ஐரோப்பாவைப் பற்றிப் பின்வருமாறு தெரிவித்தார். "ஐரோப்பா மிகவும் கெட்டுப்போய் விட்டது. புராதன கிரீஸுக்கும் ரோமுக்கும் ஏற்பட்ட கதிதான் ஐரோப்பாவுக்கும் ஏற்படப்போகிறது. பெண்களுக்கு நாணமென்பதே இல்லை. அவர்கள் நிர்வாணமாக இருப்பதில் ஆனந்திக்கின்றார்கள். அமெரிக்கா உட்பட மேனாடுகள் யாவற்றிற்கும் மூளை குழம்பிவிட்டது"

---

# மன்னர் ஜெனனதின விழா

மாட்சிமைதங்கிய மன்னர்பிரான் 8-ம் எட்வேட் அவர்களது ஜெனனதினவிழா யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் 23-6-36 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் நகரசங்க எல்லைக்குட்பட்ட தமிழ்ப் பாடசாலைகளுள் சென்ஜோன்ஸ் பாடசாலை ஸ்ரீ பார்வதிவித்தியாசாலை, இந்துக்கல்லூரித் தமிழ்ப்பாடசாலை, சென் போசவ் சாதனுபாடசாலை, நமசிவாயவித்தியாசாலை, கொழும்புத்துறை சைவவித்தியாசாலை, விவேகானந்த வித்தியாசாலை, நாவலர் பாடசாலை, சேணியதெரு வெஸ்லியன் மிஷன் பாடசாலை, கந்தர்மடம் சைவவித்தியாசாலை, சென்ற் நிக்கொலாஸ் வித்தியாசாலை, பெரியகடை பாரதி பாஷிய வித்தியாசாலை, முகம்மதிய பாடசாலை, வேம்படி பெண் தமிழ் பாடசாலை, சண்டிக்குழி தமிழ்ப் பாடசாலை, செட்டித்தெரு தமிழ்ப் பாடசாலை ஆகிய 16 பாடசாலைகளும் விழாக்கொண்டாட்டத்தில் பங்குபற்றின. அங்கு நடைபெற்ற விளையாட்டுக்கள் ஒவ்வொன்றிலும் முதலிடம் பெற்ற பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் பரிசு வழங்கப்பட்டது.

திரு K. S அருள்நந்தி, திரு R.R. நல்லையா ஆகிய இருவரும் சங்கீதக் கதிரைப் போட்டியில் முறையே முதலாவது இரண்டாவது பரிசு பெற்றனர். ஆண்பாலார் விளையாட்டுக்களில் கொழும்புத்துறை, சென்ற் ஜோசவ்ஸ் சாதனுபாடசாலையும், பெண்பாலார் விளையாட்டுக்களில் வேம்படி பெண் தமிழ்ப்பாடசாலையும் முதலிடம் பெற்றமையால் அப்பாடசாலைகட்கு ஒவ்வோர் வெள்ளிக் கிண்ணம் வழங்கப்பட்டன.

ஸ்ரீமதி E. T டைசன் துரையவர்கள் பரிசுகளை வழங்கினர். திரு. K. S. அருள்நந்தி அவர்கள் எந்தமிழ் மக்கள் முற்காலத்தைப் போலவே இக்காலத்திலும் இராஜபக்தியைப் பெரிதும் பாராட்டிக் கொண்டாடியதைச் சிலாகித்துப் பேசி மேலும் திரு. N. S. சரவணமுத்து வேல் அவர்களும் திரு. M. ஜேக்கொப் அவர்களும் முறையே தனது காரியதரிசி, காரியஸ்தராகவிருந்து கொண்டாட்டத்தை இனிது நிறைவேற்றியதற்கும் தமிழ்ப் பாடசாலைகளினதும், ஏனையோரினதும் சார்பாக நன்றியறிதல் கூறினர்.

மா. த. மன்னர் செங்கோலோச்ச ஞானம், பலம், ஆயுள் கொடுத்தருளுமாறு மாகாணத்தலைவர் E T. டைசன் அவர்கள் இறைவன் திருவருளை வேண்டினர்.

திரு. M. ஜேக்கொப் அவர்களை ஆசிரியராகக்கொண்டு 1936ல் நடைபெறுகின்ற தேகாப்பியாசவகுப்பினராகிய தமிழாசிரியர்களாலியற்றப்பெற்ற புதிய இராசவாழ்த்துப்பாக்கள் பாடப்பெற்றன. மாலை ஆறுமணியளவில் கொண்டாட்டம் இனிது நிறைவேறியது. —கடித

## மன்னர் திருமணம்

### மகுடாபிஷேகத்திற்கு முன் நடைபெறுமா?

லண்டன் 28உ

எட்டாவது எட்வர்ட் மன்னரின் திருமண விஷயம் அக்சிய நாணய மாற்று மார்க்கட்டில் மிகுந்த பரபரப்பை உண்டுபண்ணியிருக்கிறது. அநேகமாக மன்னர்பிரான் மகுடாபிஷேகத்திற்கு முன்னரேயே மணம் செய்துகொள்வாரென்று நாணய மார்க்கட்டில் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிணங்க விலை விபரங்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மன்னர்பிரானின் திருமணம் மகுடாபிஷேகத்திற்கு முன்னர் ஏற்பட்டால் அதற்குரிய நஷ்ட ஈட்டுத் தொகையைத் தங்களால் செலுத்தமுடியாதென்று லாயிட்ஸ் கம்பெனியார் அறிவித்திருக்கின்றார்கள். மகுடாபிஷேகத்திற்கு முன்னர் திருமணம் நடைபெறுமென்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் காட்டினால் லாயிட்ஸ் கம்பெனியார் நஷ்டஈடு கொடுக்கத் தயாராக இருக்கின்றார்கள். டென்மார்க் மன்னரின் மருமகளாகிய அலெக்ஸான்ட்ரைன் லூயி தான் இங்கிலாந்தின் ராணியாகக் கூடுமென்று கூறப்படுகிறது ஆனால் இதற்கு மறுப்பும் ஏற்பட்டிருக்கிறது.

அலெக்ஸான்ட்ரைன் இளவரசி 1914ம் வருடத்தில் பிறந்தாள். அவள் ஹெரால்ட் இளவரசரின் புதல்வி.

## பூனை-பாம்பு சண்டை

### மாது கடியுண்ட வகை

காமில்லா ஜூன் 26—

காசிகதா என்ற கிராமத்தில், மிகவும் ஆச்சரியமான நிலைமையில் ஒரு முஸ்லிம் ஸ்திரீ பாம்பால் கடிக்கப்பட்டிறந்தாள். அவள் ஒரு கொசுவலை கட்டிக்கொண்டு தன் குடிசையில் படுத்துக்கொண்டிருந்தாள். குடிசைக்குள்ளாக, அவளது படுக்கையருகில் ஒரு கரிய பாம்பும் ஒரு பூனையும் சண்டை செய்து கொண்டிருந்தன. அவையிரண்டும் களைத்துப் போயின. அப்போது தற்செயலாய் பாம்பு, தூங்கிக்கொண்டிருந்த ஸ்திரீயின் காலைக் கடித்துவிட்டது. அவள் உடனே கூச்சலிட்டாள். சிறிது நேரத்தில் ஆட்கள் வந்து பூனையையும் பாம்பையும் பிடித்து வைத்துவிட்டார்கள். ஸ்திரீக்கு சிகிச்சை செய்யப்பட்டது. மாலை 5 மணிக்கு அந்த ஸ்திரீ இறந்தாள். அந்த சமயத்தில் பாம்பும் பூனையும் கூட இறந்துவிட்டன.

### அபின் தின்ற சர்ப்பம்

திப்ருகாரில் அபின் சாப்பிடும் ஒருவன் அபினை உருட்டித் தயாராக வைத்துவிட்டு, ஏதோ காரியமாகக் குடிசைக்கு வெளியே வந்தான். மறுபடி அவன் உள்ளே போனபோது ஒரு நாகம் அபின் உருண்டையைத் தின்றுவிட்டுப் போய்க்கொண்டிருந்தது. அபின் முழுவதையும் அது தின்றுவிட்டதாம்.

## ஜெர்மனியின் முயற்சி

### டக்ரர்சாக்டின் அபிப்பிராயம்

பெர்லின் 28உ

பழைய குடியேற்ற நாடுகளைத் திரும்பப்பெற ஜெர்மனியில் முயற்சி பலமாக நடைபெற்று வருகிறது. இம்முயற்சிக்கு மூலகாரணமாக இருப்பவர் பொருளாதார மந்திரியாகிய டாக்டர் சாக்ட். அவருக்கு ஹெர் ஹிட்லரின் முழு ஆதரவும் கிடைத்திருக்கின்றது. ஜெர்மன் பாங்கி டைரக்டர்களில் ஒருவரான டாக்டர் சக் பாங்கு அதிகாரிகள் கூட்டத்தில் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

ஜெர்மனிக்கு இப்பொழுது மூலப் பொருள்கள் அதிகமாகத் தேவை இருக்கிறது. இத் தேவையைப் பூர்த்திசெய்ய ஜெர்மனி தன்னுடைய பழைய குடியேற்ற நாடுகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். ஜெர்மனியின் பழைய குடியேற்ற நாடுகளை இப்பொழுது பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம், தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகள் நிர்வகித்து வருகின்றன. அவர்கள் தங்களுடைய மூலப்பொருள்களுக்கு ஆபத்து ஏற்படாமல் ஜெர்மன் குடியேற்ற நாடுகளை விட்டுக்கொடுக்கலாம்.

ஜெர்மனி பழைய குடியேற்ற நாடுகளைத் திரும்பப்பெற்றாலொழிய ஜெர்மனியர்கள் கஷ்டமில்லாமல் வாழமுடியாதென்பதே டாக்டர் சாக்டின் அபிப்பிராயம். குடியேற்ற நாட்டுப் பிரச்னை திருப்திகரமாகத் தீர்க்கப்படாவிட்டால் ஜெர்மனியால் ஐரோப்பாவில் ஓர் பெரிய நெருக்கடி ஏற்படக்கூடும்.

## வண்-வட மேற்கு விசுவலிங்கப்பிள்ளையார் கோயில் அறிவித்தல்

இக்காற் சகலருமறியவேண்டியது யாழ்ப்பாணம்வண்ணார்பண்ணை வடமேற்கு அன்னமார் கழனி என்னும் காணியில் எழுந்தருளியிருக்கும் விசுவலிங்கப்பிள்ளையார் கோவிற் பூசை திருவிழா முதலியவற்றைக் கிரமமாய் நடப்பித்தற்காக அவ்வூரவர்கள் ஒருங்குசேர்ந்து ஓர் மகாசபையை 1936ம் ஆ ஆனிமீ 29-ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அக் கோவிற் சந்நிதானத்தில் கூட்டினர்.

இம் மகாசபையில் உள்ளவர்களில் பன்னிரண்டு பேரைத் தெரிந்தெடுத்து ஓர் காரிய நிருவாகசபையையும், அச்சபையில் ஐந்துபேரை டிரஸ்டிகளாகவும் தெரிந்து அக் கோவிற் கருமங்களை நடத்துவதற்கு வைப்பதாகவும் இம் மகாசபை நிர்மாணித்தது. அச்சமயம் கீழே காட்டப்பெற்ற சைவ நண்பர்கள் சமுகமளித்துக் கைச்சாத்திட்டனர்.

| | | | |
|---|---|---|---|
| க பொ ஆறுமுகம் | மு சபாபதி | மு கந்தையா | ச கனகசபாபதி ஐயர் (பூசகர்) |
| சி கணபதிப்பிள்ளை | வே வயிரமுத்து | வ மயில்வாகனம் | மா சுப்பையா |
| கா சரவணமுத்து | மு ஆறுமுகம் | கா செல்லப்பா | ச வீரவாகு |
| மு நடராசா | செ கந்தையா | கா கந்தையா | சி சரவணமுத்து |
| ச மயில்வாகனம் | கா கந்தையா | க முத்துலிங்கம் | ஆ முருகேசு |
| மு சின்னத்தம்பி | வ பெரியதம்பி | ம கந்தையா | கா சுப்பிரமணியம் |
| மு கந்தப்பு | சி கனகசபை | சி மருதப்பு | மு நாகேந்திரம் |
| செ வயிரமுத்து | மா பொன்னம்பலம் | ம செல்லத்துரை | மு சொன்னம்பலம் |
| வே சின்னத்துரை | இ இராமலிங்கம் | க இராசரெத்தினம் | வ பொன்னம்பலம் |
| வீ கணபதிப்பிள்ளை | கா கந்தையா | ச செகிலையா | ச பொன்னுத்துரை |
| க நாகேசு | ச மருதப்பு | ச வேலுப்பிள்ளை | ஆ நாகர் |
| ச கவரத்தினம் | ச ம கந்தையா | ச ஆறுமுகம் | வ பொன்னுத்துரை |
| வே துரையப்பா | த கணபதிப்பிள்ளை | | |


## சண்டிருப்பாய் வேவிற்பதி ஐயனார்கோவிலின் சம்புரோட்சண கும்பாபிடேக மகோற்சவம்.

—:o:—

யாழ்ப்பாணத்திலே பழமை பெற்ற கோவில்களுள் ஒன்றாக விளங்குகின்ற ஷை வேவிற்பதி ஐயனார்கோவிலில் குறைவாக இருந்த சில திருப்பணிகளைப் பூர்த்தியாக்கப்பணம் அனுப்பியவர்களும் அனுப்பவிருக்கின்றவர்களுமாகிய பலபுண்ணிய சீமான்களின் உதவித் தைரியத்தால் திருப்பணிகளை நிறைவாக்கி இந்தமீ 27ம் திகதி (10-7-36) வெள்ளிக்கிழமை பகல் 12 மணியளவில் வரும் கன்னிலக்கின சுபமுகூர்த்தத்தில் சம்புரோட்சண கும்பாபிடேகஞ் செய்து 12 நாள் துவஜாரோகண நைமித்திக திருவிழாக்களும் நடாத்த இருத்தலால் சைவாபிமானிகளனைவரும் அன்புடன் அழைக்கப் படுகின்றனர்.

த. செல்வத்துரை,

சண்டிருப்பாய்,

28—6—36

(Mis, 66. 29-6 & 2-7-36.)


## மாட்சிமை தங்கிய எட்டாவது எட்வேட் அரசர் பெருமானின் முதலாவது வெள்ளணி விழாவில் வட்டுக்கோட்டை சைவாங்கில கலாசாலையில் படிக்கப்பட்ட மங்கல வாழ்த்துப் பா.

இது

நவாலியூர், க. சோமசுந்தரப் புலவரால் பாடப்பட்டது.

### வெண்பா.

மன்னும்மழை பொழிக மாறு வளஞ்சுரக்கப்
பன்னும் நலந்தழையப் பாரோங்க—மன்னர்பிரான்
வாடாத செங்கோல் மலியெட்டு வேட்பெருமான்
நீடூழி வாழ்க நிறைந்து.

### நேரிசை ஆசிரியப்பா.

வாழிபல் லாண்டு வாழிபல் லாண்டு
சூழ்கட லுலகந் தோன்முறை புரந்து
வாழிபல் லாண்டு வாழிபல் லாண்டு
பாயிருள் கடிந்து பல்பொருள் விளக்கும்
ஆயிரங் கிரணத் தலரியங் கடவுள்
நிறைந்தசோல் லாணை நேமியி னெங்கும்
பாந்து நீங்காது படரொளி விரிக்கும்
பூழழு தாண்ட புரவல னெங்கோன்
நாமலி நல்லிசை நாயக னாந்தாம்
யோட்ஜசென வுரைக்கு மொப்பிலான் டகைக்கும்
மாட்சிசால் கற்பின் மங்கலச் செல்வி
சீரிய செம்மை மேரிா ணிக்கும்
எல்லாம்வல்ல நல்லவ னருளால்
ஆண்டா யிரத்தென் ஞாற்றுட னென்பான்
பூண்டவி ரிரண்டு பொற்புறு மிதுனம்
இருபான் மூன்றி லொருபெருந் தவத்தால்
முன்னர்வந் துதித்த மன்னவர் மன்ன!
தாயென வுலகைத் தழீஇயா சாண்ட
மாயாப் பெரும்பெயர் மரைமலர்ப் பிராட்டி
அம்மைவிக் றேறிய வாசிகன் களிக்க
மன்மகன் மகன்வழி வருமக னாகி
வந்தவ தரித்த சுந்தரத் தோன்றல்!
வளமலி யுவேல்ஸ்ஸெனு மாநகர் வாழ
இளவா சாகி யெழுந்தவெம் பெருமான்
மண்டிணி ஞாலத் தெண்டிசை வளனும்
காலினுங் கலத்தினுங் ககனவூர் தியினும்
கண்ணினுஞ் செவியினுங் கருத்தினும் பொருந்தக்
கண்டுகேட் டறிந்த மண்டுபே ரறிஞ!
எவ்வெவ ருரிமையு மவ்வவர் கொள்ளத்
தண்டா நீதி கொண்டினி தாளும்
ஆங்கில வாசி னமைச்சியல் பொருளியல்
தேங்கிய வாணிகச் செயன்முறை முதலாப்
பல்துறை முற்றிய கல்வி யாள!
உளங்கொள மன்னுயி ரோம்பிய கொள்கைப்
பழந்தமிழ் வேந்தர் பண்பினைப் போலத்
தன்னுரு மறைத்துத் தானவ னுழைப்போய்
ஏழை மாக்கள் வாழ்முறை நாடி
இன்னருள் புரியும் நன்னயக் குரிசில்!
பல்வகை யாடலும் வெல்படைப் பயிற்சியும்
நாட்டக வாழ்க்கையும் வேட்டக விருப்பும்
உழதொழில் வேட்கையும் பழதின் றமைந்த
வாம்பரி யேற்றமு மரக்கல வோட்டமும்
ஆன விசும்பி னகனெறிப் படரும்
வான விமான மாண்புநன் குடையோய்!
படையே குடியே கூழே யமைச்சே
நட்பே யரணெனச் செப்பிய வாறும்
மேதக வுடைய நீதகல் செம்மால்!
கண்ணுக் கினிமையுங் கடுஞ்சொ லின்மையும்
எண்ணித் துணிதலு மியற்றலு மீட்டலும்
காத்தலுங் காத்தவை வகுத்தலு மதாஅன்று
அன்பு மருளு மாருயி ரோம்பும்
பண்பும் படைத்த வண்பெறு குமர!
கட்டுபா ரனைத்துங் கைதுவித் திறைஞ்சும்
எட்டுவேட் டெட்டெனு மிரும்பெய ரண்ணல்!
வாழையின் வாழை மாயினிற் சிறக்கும்
நாளுய ராசியல் நானிலம் புகழ்ந்த
தந்தையின் றனெனத் தன்றேள் தாங்குபு
வந்தருள்வீர மதவிளங் களிறே! நீதான்
மந்திர விதியின் மதிவழி நிறுத்துந்
தந்திர வமைச்சர் தமக்கிரு கண்ணுப்
மாற்றலர் தமக்குப் போற்றரும் வலியாய்
தண்புடை யவர்கட் கன்பிய னிலையாய்
வயுதல் லுயிர்கட் கின்னுயி ரன்றியுந்
தாயுந் தந்தையுந் தலைவனு மாகித்
தமர்பிற ரென்னுங் கவர்நெறி காட்டாச்
சமநிலை பேணித் தனிமுடி சூடி
அழியா வாணை ஒளிவல முருளச்
செம்மைசே ராட்சித் திங்கள்வா னிழற்ற
மங்கலச் செங்கோல் மனுமுறை திகிர
ஒற்றுமை வெல்கொடி சுற்றிலு முயர
இந்திய மக்க ளிருந்துறை நீங்கி
நந்தாச் செல்வ நாளுட னடையவும்
பசிபிணி காக்கவும் வசிவளன் சுரக்கவும்
தாமக நதியின் சார்கரை எக்கர்
மாமணை லளவின் வழிவழித் தழைத்து
வாழிய பெரும பல்லாண்டே
ஆழிசூ ழுலக மருண்முறை புரந்தே.

## பத்திரக் கிரயம்.

( முற்பணமாக அனுப்புதல் வேண்டும். )

| யாழ்ப்பாணப் பட்டினம் | தமிழ் | ஆங்கிலம் | இருபிரதிகளும் |
|---|---|---|---|
| | ரு. ச. | ரு. ச. | ரு. ச. |
| (நகரசங்க எல்லைக்குட்பட) | | | |
| ஒருவருடத்திற்கு | 5 - 00 | 5 - 00 | 9 - 00 |
| ½ வருடத்திற்கு | 3 - 00 | 3 - 00 | 5 - 00 |
| ¼ வருடத்திற்கு | 2 - 00 | 2 - 00 | 3 - 75 |
| இலங்கை இந்தியா | | | |
| ஒருவருடத்திற்கு | 8 - 00 | 8 - 00 | 12 - 00 |
| ½ வருடத்திற்கு | 4 - 50 | 4 - 50 | 7 - 00 |
| ¼ வருடத்திற்கு | 2 - 50 | 2 - 50 | 4 - 50 |
| சிங்கப்பூர் முதலிய அந்நிய நாடுகள் | | | |
| ஒருவருடத்திற்கு | 9 - 00 | 9 - 00 | 13 - 00 |
| ½ வருடத்திற்கு | 5 - 00 | 5 - 00 | 7 - 50 |
| ¼ வருடத்திற்கு | 3 - 00 | 3 - 00 | 5 - 00 |
| தனிப்பிரதி சதம 5 | | | |

கொழும்பு தனிப்பிரதிநிதி:-

ப. மு. ரா. முத்துச்சாமி செட்டியார்,
"நியூஸ் மார்ட்"
89. கோவில்தெரு,
கும்பனித்தெரு.


## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்து வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸலி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரசபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் நீங்கும். ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் ருதுக வாய்வு, பிரசவஅறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்து தேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரை ருத்தலுக்கு ரூபா பத்து. கால் ருத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூரினுக்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததனால் முன் மணிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
வெகுரான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்று,
மட்டக்களப்பு.

Y46 1-1-36 to 31-12-36) இலோன்.

# கல்வியும் அதன் பயனுய அன்பும்

## திரு. வி. வீரசிங்கம் அவர்கள் சொற்பொழிவு

"பிள்ளைகளுக்கு அன்பு மயமான புத்திமதிகளைப் புகட்டி அவர்களை அன்புமயமாக வளர்க்கவேண்டும்"

(இது புங்குடுதீவு கணேச வித்தியாசாலை மண்டபத்தில் சென்ற சித்திரைத் திங்கள் 6-ந் தேதி (18-4-36) மானிப்பாய் இந்துக் கல்லூரிப் பிரதம ஆசிரியர் ஸ்ரீமான் வி. வீரசிங்கம் B. A. அவர்கள் நிகழ்த்திய பேருரையின் பொழிப்பு)

சபையோர்களே!

உமது கல்விக்கழகத்திற் பேசுவதற்காய் இன்று எனக்குக் "கல்வியும் அன்பும்" என்ற விஷயத்தைக் கொடுத்தீர்கள். இத்தகைய ஓர் விஷயத்தை நீவிர் நினைத்து என்னைப் பேசும்படி கேட்டுக்கொண்டது, யான் ஓர் ஆசிரியனாயிருப்பதனாலேயே யென்று எண்ணுகின்றேன். "கல்வியும் அன்பும்" என்ற விஷயத்தைக் குறித்து அறியவேண்டிய சிரமம் யாழ்ப்பாணவாசிகளுக்கு அதிகம் இருந்திருக்கவில்லை. இவ்விரு பொருட்களின் மாண்பையும் அவர்கள் நன்கறிந்திருந்தனர். நாவலர் பெருமான், வை. சி. தாமோதரம்பிள்ளை அவர்களாதிய பெருமக்களைத் தந்த நாடே இந்நாடு. ஆதலின் கல்வியிற் குறைந்த நாடுமல்ல, கல்வியின் பயனுமன்பின் மயத்திலும் குறைந்த நாடுமல்ல எங்கள் நாடு. ஆயினும் தற்போது இவ்விஷயங்களிலும் ஆர்வம் குன்றி மங்குகின்ற தசையிலிருக்கின்றன. ஆதலின் மங்குதலின்றி வளர்தற்கேற்ற வழிவகைகளை நாடுதற்கு இவ்விஷயங்களில் உரை நிகழ்த்த வேண்டியதும் அவசியமே.

எதற்காகக் கல்வியோடு அன்பை இணைத்தீர்களென்பதை நோக்குவோம். கல்வியின் நோக்கங்கள் யாவை? எமது நாட்டிற் கல்வியின் நோக்கம் தர்ம அர்த்த காம மோக்ஷங்களைப் பெறுதலேயாகும். இந்நான்கு பொருட்களையும் அடைதற்கே கல்வியைக் கற்கிறோம். முதலாவதான தர்மத்தை யாம் அடைய வேண்டின் அன்பே அதற்குத் துணைக்கருவியாயிருத்தல் வேண்டும். தர்மமென்பது அறமேயாம். அறம் இல்லறம் துறவறமாவன. இவ்விரு வகை அறங்கட்கும் அன்பே முதற் காரணமாயிருத்தல் வேண்டும். இரண்டாவதான அர்த்தம் அல்லது பொருளை எய்துவதற்கும் அன்பு ஓர் முக்கியமான அங்கமாயிருத்தல் வேண்டும். காமம் அல்லது இன்பத்தை அடைதற்கும் அன்புடைமையின்றி அனுகூலமாகாது. மோக்ஷம் அல்லது வீடுபேற்றினை அடைதற்கும் அன்பின்றி முடியாது. ஈங்கு கல்வியின் பயனாக அடைதற்குரிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கிற்கும் அன்பை இணைக்காதவிடின் கல்வியால் அவற்றை அடைவதுங் கிடையாது. கல்வியாற் பயனும் கிடையாது.

மேலைத் தேசவாசிகளின் கல்வியின் நோக்கமும ஒருவாறு தன்னையறிதலே (Self realization) ஆகும். ஆனால் இவர்களை நாங்கள் பின்பற்றினால் எமது கல்வியோடு அன்பை இணைக்கமுடியாது. மேலைத்தேசவாசிகளின் பிரதான நோக்கம் பொருளீட்டமே. எமது நோக்கத்தைத் திருவள்ளுவநாயனாரவர்கள்

"கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன் நற்றாடொழா ரெனின்"

என்று கூறினர். கல்வியின் பயன் கடவுளைத் தொழவேண்டுமென்றிருக்கிறபடியாலும் மேலைத்தேசவாசிகளின் நோக்கம் பொருளீட்டமாயிருப்பதாலும் இவ்விருபாலாரின் நோக்கத்தினிடையில் முரண் ஏற்படுகின்றது; ஆதலின் எமது கல்வி முறையில் மேலைத்தேசத்தாரின் இலக்கைவைத்து நடப்போமாயின் அன்பாகிய அங்கத்தை எமது கல்வியோடு இணைக்கமுடியாது. அன்பென்பதுயாது? எம் திருமூலநாயனாரவர்கள், "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்" என்று கூறினர். ஆதலின் அன்புக்கும் சிவத்துக்கும் பேதமே கிடையாது. அன்பை இவ்விதமாக விரித்துரைத்தல் வேறெவ்விதமாயும் விபரிக்க முடியாது. அது ஓர் உணர்ச்சியேயாகும். தூரத்திலிருக்கும் ஒரு சுற்றத்தவனுக்கு ஏதாவது நோய் ஏற்படுங் காலத்து எமக்குக் கண் தோள் முதலியன துடித்தல் இப்படியான அசைவுகள் உண்டுபடுகின்றன. ஓ காலம் ஓர் நாயானது தன் குட்டி விழுந்து கால் முறியப்பெற்றதைக் கண்டு அழத்தொடங்கியது. முறியப்பெற்ற காலுக்கு "ஒறியண்டல்பாம்" (Oriental Balm) சேர்த்து ஒருவர் சட்டினதின்பின்பே தாய்நாய் தன் அழுகையை நிறுத்தியது. கோழி புழுக்களைச் சந்தித்த போதெல்லாம் தன் குஞ்சுகளை அழைத்து உண்பிக்கின்றது. பிள்ளைகளுக்குக் காலின் முள் தைத்தால் பிதாமாதாக்களின் கால்களும் நோவடைகின்றன. இவற்றால் உயிர்வர்க்கம் யாவும் ஒன்றோடொன்று அன்பினாற் பிணிக்கப்பெற்றிருப்பதைக் காண்கின்றோம். இவ்விதமாகவே பரம்பொருளின் அன்பும் உலகம் முழுவதிலும் செறிந்திருக்கின்றது. இவ்வன்பினை நாம் நமது கண்களாற் பார்த்தலின்றி நமது ஞானமண்டலத்தின் கண்ணுள்ள ஓர் அசைவாகவே உணர்கின்றோம்.

அன்பை வளர்த்தற்குக் காரணகர்த்தாக்களாய் விளங்குகின்றவர் பிரதானமாகப் பெற்றோர்களே. பெற்றோர் ஆசிரியரில் முழுப்பொறுப்புந் தங்கியிருக்கின்றதென்றெண்ணிவிடுகின்றார்கள். அங்ஙனம் அவர் நினைப்பது ஓர் பிழையான அபிப்பிராயமாகும். பெற்றோரே முதற் காரணராவர். ஏனெனிற் பிள்ளைகள் எம்மோடு ஓர் குறிக்கப்பெற்ற பணிநேரம் வரைக்கும் இருக்க, பின் நீடித்தநேரம் பெற்றோரோடேயே இருக்கின்றனர். ஆதலின் ஆசிரியரோடு பெற்றோரும் இவ்விஷயத்தில் ஒத்துழைக்க வேண்டும். ஆசிரியரும் மாணாக்கரின் குற்றங்களை அதிகம் தண்டனைகள் மூலமாய்க் கடியாது, அவர்க்கு அன்பின் மயமான புத்திமதிகளைப் புகட்டி அன்பிலே வளர்க்கவேண்டும். எமது அன்பின் கிரியைகளினாலே அவர்க்குக் கல்வியில் விருப்பம் உண்டுபடச் செய்து அவரைக் கற்கச் செய்ய வேண்டும். சர்க்கரை கற்கண்டு முதலிய இனிப்புப் பதார்த்தங்களை அவர்க்கு அன்பொடும் உதவியாயினும் அவரைக் கல்வியில் வளரச் செய்யவேண்டும். ஆசிரியர் கற்பித்த பிள்ளைகள் பலசித்தி சித்திகளடைவதையும், அன்பிலார் கற்பித்தவர் சித்தி யடையாததையும் எம் கண்கூடாகப் பார்க்கிறோம். பெற்றோர் பிறர்பிள்ளைகளையும் தம் பிள்ளைகளாகப் பாவிக்கவேண்டும். "பிறர் பிள்ளை தலைதடவத் தன்பிள்ளை தானே வளருமென்று கூறுவர். ஒரு ஆசிரியனின் உயர்ச்சி அவரின் உயர்வுக்குக் காரணமாகும் ஆகலின் ஆசிரியரும் பெற்றோருமே அன்பின் இலக்கணத்தைத் தம் பிள்ளைகட்கு வெளிப்படையாய்க்காண்பிக்கவேண்டியவராகின்றார்.

இது நிற்க அன்பை வளர்த்தல் எங்ஙனம் என்பதை இனி ஆராய்வாம். இவ்வன்பிற்காகக் கல்வியில் ஏற்படும் பாடத்திட்டம் (curriculam of studies) மாணவர் அன்பின் மயமாய் வளர்தற்கேற்றதாய் அமைக்கப் பெறுதல் இன்றியமையாதது. இதைவிட, நாமும் பிள்ளைகட்கு முன்மாதிரியா யிருக்கக்கூடிய நடையும், கிரியையும், ஒழுக்கமும் உடையராயிருத்தல் வேண்டும். அன்பின் பெருமையை விளக்கும் அநேக கற்பனைக் கதைகளை உண்டாக்கி அவர்களின் செவிகளிற் புகுத்தவேண்டும். தாவரவர்க்கமும் பேசுவதாயும், அவற்றை வெட்டியிடத்து அவற்றிற்கு இரத்தம் பாய்வதாயும், அவற்றிலும் அன்பின் கிரியைகளுண்டென்பதை விளக்க அமைத்த கதைகளையும், மிருக வர்க்கத்திலும் அன்புண்டென்பதைக் காண்பிக்க அமைத்த கதைகளையும் அவர்க்குக் கூறவேண்டும் "குட்டின தம்பியை முத்தமிட்ட தமக்கை" போன்ற கதைகளையும் கூறி அவரை அன்பின் மயமாய் வளரச் செய்யவேண்டும். சுவாமி விவேகானந்தரின் தாயின் கதை, இராமர் சீதையின் கதை, முனிவரின் கதைகள், புராண இதிகாசக் கதைகள் யாவற்றையும் அவர்க்குக் கற்பிக்கவேண்டும். இவ்விதமான முறையிற் கல்வி கற்பித்தால் எம்பிள்ளைகட்குக் கல்வியாலாய பயன் அன்பே என்பது புலப்பட்டுக் கல்வியோடு அன்பையும் இணைத்து இருபொருட்களும் ஒன்றையொன்று பிரியாது ஒருமித்துச் சேர்ந்து நிலவும். கல்வியும் அன்பும் இணைக்கப்பெற்று விளங்க எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிவாராக.

# புங்குடுதீவுப் பாலம்

## வரவுசெலவுத் திட்டத்தின் மான்யம்

கொழும்பு ஜூன் 29—

புங்குடுதீவுப்பாலம் விஷயமாக பல கோட்களாகப் பெருத்த கிளர்ச்சி செய்யப்பட்டு வருவது நேயர்களுக்கு ஞாபகமிருக்கும் 1936-37-ம் வருட வரவுசெலவுத்திட்டத்தில் மேற்படி பால விஷயம் சேர்க்கப்பட்டிருக்கிறது. இவ்விஷயம் மராமத்துத்துறைத் தொகுதியில் ஒருவித கலகலப்பை உண்டுபண்ணுமென்று சிலர் பேசிக்கொள்ளுகிறார்கள். தங்களது தொகுதி அங்கத்தவர் அரசாங்கசபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டதினால் தங்கள் தொகுதித்தேவையை யார் எடுத்துவாதாடுவார்கள் என்ற எண்ணம் வடமாகாணத்துறை மக்களிடையே இருந்தது என்றும் இப்போது இதன் மூலம் மந்திரிமார்கள் தலைவர் தொகுதியில் பிரத்யேக கவனம் செலுத்துவார்கள் என்று அத்தொகுதி மக்கள் எண்ணத் தொடங்கியிருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

புங்குடுதீவுப் பாலத்தைப்போன்ற பூநகரிப் பாலத்தைப் பற்றிய விஷயமும் ஒரு பழைய விஷயமாகும், புதிய நிதிவருட வரவு செலவுத் திட்டத்தில் இந்தப் பாலத்திற்கும் இடமமைக்கப்பட்டிருக்கிறதென்று தெரிகிறது. புதிய வரவு செலவுத் திட்டத்தில் வடமாகாணத்திற்குத் தான் நல்ல பலன்கள் கிடைக்கப் போகின்றன வென்று இப்பொழுதே தென் பகுதியில் முணுமுணுப்புத் தொடங்கியிருக்கிறது.

பூநகரிப் பாலத்தினால் திரு. மகாதேவாவும், திரு. பொன்னம்பலமும் ஒருங்கே பெருமை கூறிக்கொள்ள இடமிருக்கிறது. இவர்கள் இருவரும் மந்திரி உத்தியோகத்திற்குச் சமரிட்டார்கள். ஆனால் பாவம் 7 மந்திரிப் பதவிகளில் ஒன்றுகூடத் தமிழருக்கு இல்லாமற் போய்விட்டது. ஆனால் மேற்கூறிய இருவரும் பூநகரிப் பாலம் வேண்டுமெனப் போராடினர். திரு. பொன்னம்பலத்தின் தொகுதியைச் சேர்ந்தது பூநகரி புதிய பாலத்தினால் யாழ்ப்பாணமும் (திரு. மகாதேவா தொகுதி) பூநகரியும் இணைக்கப் போகின்றன. இதனால் இருபகுதிக்கும் பல நன்மைகள் உண்டு.

# ரிஷிகேச மஹாத்மாவின் யோக நிஷ்டை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குள் பரகாயப் பிரவேசம் செய்வது அவரால்முடியும். ஆனால் ஈஸ்வரனோடு ஐக்கியமாக வேண்டுமென்பதுதான் அவருடைய நோக்கமாக இருப்பதால் உலகசம்பந்தமான அந்தச்சக்தியையும் அவர் மனம் நாடவில்லை.

சஸமஸ்தானத்தில் சமாதியில் அடங்கியுள்ள பிராணனை எப்படி மறுபடி எழுப்பிச் சரீரம் முழுதும் வியாபிக்கும்படி செய்கிறதென்று கேட்டோம். "நீங்கள் தூங்கி விழிக்கவில்லையா? அதுபோலத்தான்" என்று சுலபமாகப் பதில் கூறினார். சில சமயங்களில் சமாதியிலிருந்து எழுந்திருக்கமுடியாமல் பிராணன் நிரந்தரமாக அடங்கிவிடுவதும் உண்டு. அந்தமாதிரி ஏற்படக்கூடிய அபாயத்தையும் பொருட்படுத்தாமல்தான் இவர் மேற்படி சமாதியோகத்தை மேற்கொண்டார்.

அவருடன் காவிகஸ்திரமணிந்த மற்றொரு தபஸி இருந்தார். அவர் ரிஷிகேசத்திற்குப் புதியவர். அவர்தான் எங்களுக்கு யோகியின் பதில்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துதவினார். அவருடைய அபிப்பிராயத்தைக் கூறும்படி நாங்கள் கேட்டோம். அந்த யௌவன புருஷர் உண்மையிலேயே சமாதி கைகூடினவரென்றும் அவர் பூர்வஜென்மங்களிலே மிகுந்த புண்ணியம் செய்திருப்பதால்தான் இந்த ஜன்மத்தில் இந்தப் பெரும் பாக்கியம் பெற்றிருக்கிறாரென்றும் சன்னியாசி கூறினார்.

சமாதியிலிருக்கையில் மிருகங்களாலும்சிறு பிராணிகளாலும் ஸ்தூல சரீரம் அழிக்கப்பட்டுவிடக்கூடுமாகையால் கல்லறை கட்டப்பட்டதாம். மனித சஞ்சாரமற்ற மலைக்குகைகளில் யோகாம் பயிலாமல் இவ்வளவு விளம்பரத்துடன் ஏன் செய்தார் என்று கேட்டோம். யோக சாதனம் வேதங்களில் காணப்படும் கற்பனையல்ல. முயற்சியால் மனிதன் பெறக்கூடியது என்பதை உலகத்திற்குக் காட்டவே அவர் இப்படிச் செய்தாராம். இதைப் பலருக்கும் உபதேசிக்க வேண்டுமென்றும் அவர் தமது 29-வது வயதில் நித்திய நிர்விகற்பசமாதியிலிறங்கிவிடப் போகிறாராம்.

நாங்கள் கடைசியாக யோகியைப் பார்த்துக் கேட்டதாவது:— "யோகிஜீ! என் அவ்விதம் செய்யத்தீர்மானித்திருக்கிறீர்கள்?"

யோகி தமது பார்வையை உயர்த்தி எங்களைக் கூர்ந்து நோக்கினார் "அவ்வாறு தியானத்திலிருப்பதுதான் பரமானந்த அனுபவம் அதற்குமுன் இவ்வுலகவாழ்க்கை சாரமற்றது. அதையறிந்தவன் இதற்கு மீண்டும் வர நினைக்கமாட்டான்" என்று பதிலளித்தார்.

42தினங்கள் கழிந்ததும் கல்லறை திறக்கப்பட்டது. தேவையேற்பட்டால் உதவிசெய்வதற்காக ஒருடாக்டரும் வந்திருந்தார். கல்லறைக்குள் வைத்திருந்த ஜலம் அப்படியே இருந்தது. யோகியின் உடலில் சில இடங்களில் கறையான் புற்று வைத்திருந்தது. யோகி "ஓம்" என்ற பதத்தை உச்சரித்துக் கண்களைத் திறந்தார். அவரால் நடக்க முடியவில்லை. அவரைச் சூரியவெளிச்சமுள்ள இடத்திற்குத் தூக்கிச் சென்றனர்.

நாங்கள் கண்டதையும் கேட்டதையும் உள்ளது உள்ளபடி உரைத்திருக்கிறோம். இவற்றின் உண்மைகளை ஆராயவேண்டிய பொறுப்பு அறிவாளிகளையே சேர்ந்தது.


**திருநெல்வேலி ஒற்றுமை நிதி,**

(வரையுளது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா **500,000.**

ஒன்று 25சதமாக 80 மாதங்கள் செலுத்திரூபா 25ம் ஆதாயமும்பெறலாம்

தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும் திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றன.

வேண்டிய இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும். தேசிய கருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெற முடியும். ஆதலால், முதலை வளர்த்து வேலையளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும் நோக்கங்கொண்ட இந்நிதியை ஆதரியுங்கள்!

இலகுவான முறையில் இறக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம். உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிபந்தமாயும்,சம் பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!!

கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருளும் சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளுவோம்.

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(Y. 189. 1-11-35 to 31-10-36.) வி.



**N.வைத்திலிங்கம் & கம்பெனி**

பெரியகடைத்தெரு,யாழ்ப்பாணம்.

கட்டிடங்களுக்குவேண்டிய முதல்தரமானசாமான்கள் ஜெர்மனி, ஜப்பான், டச்சு முதலியவிடங்களில்செய்யப்பட்டஉத்தரவாதமுள்ள சிமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள் வர்ணங்கள், வார்ணிஷ், கொழுக்கி ஓடுகள் இன்னும் கட்டிடத்திற்குரிய சகல சாமான்களும் எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால் சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE:
38, 3rd Cross Street,
Colombo.

Telephone No. 30.

(Y. 47. 8-2-36—7-2-37) வி

# இலங்கையில் நெய்யப்பெற்ற சீலைகள்

## வெள்ளவத்தை மில்லில் தயாரிக்கப்பட்டவை

ஒவ்வொருவீட்டிலும் நன்கு அறியப்பட்டவை என்பது எல்லோருக்குந் தெரிந்த விஷயம்

இவை நன்றாக உடைதாங்கக்கூடியவை; பார்வைக்கு மிக அழகானவை; மிக மலிவானவை;

உங்கள் வியாபாரிகளிடம் **இச்சீலைகளையே** தரும்படி வற்புறுத்துங்கள்!

உத்தரவாதம்பெற்ற அழியாத நிறமுள்ள நமது பட்டுக்கரைச் சேலைகள் வேற்று நாடுகளிலிருந்து இங்கு சேலைகளை இறக்குமதி செய்விக்கும் எவருக்கும் பொறாமையை விளைப்பனவாகும்.

உத்தரவாதம் பெற்ற அழியாத நிறமுள்ள நமது பட்டுக்கரை வேட்டிகளும் சால்வைகளும் அவற்றை உபயோகிப்போருக்குப் பெருமையை அளிப்பனவாகும்.

**சில்லறைவியாபாரக்கடை,** பெரியகடை, யாழ்ப்பாணம்

தி சிலோன் ஸ்பின்னிங் அன்வீவிங் கம்பெனி லிமிடெட்டின்

முதலாவது மோர்ட்கேஜ்டிபெஞ்சர்கள் வைத்திருப்போருக்கு டிரஸ்டிகள்



# Nethrananda Thailaya

**Ceylon's Premier Curative Medicine Oil.**

## நேத்திரானந்த தைலம்.

இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில் இதுவேமுதல்தரம்.

6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா 2-50.

தபாற்கூலி 45 சதம்.



இது சிரசில் உண்டாகும் மண்டையிடியை ஐந்து நிமிஷத்திற்குள் நீக்குவதோடு கண்ணில் உண்டாகும் சகல எரிச்சல், மங்கலான பார்வை, நீர்வடிதல், சதைபடர்வு, என்னும் சகல கண்வியாதிகளையும், தலைமயிர் உதிர்தல், தலை மொட்டை, தலை கரை, பீனிசம் என்பவைகளையும் போக்கி தலைமயிரை நீளமாய் வளரச்செய்து பளபளப்பையும் கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணாடி போடத் தேவையில்லை. சிறியோரும் பெரியோரும் வயது வித்தியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள கனவான்களாகியபெரிய உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், சீமான் சீமாட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிறார்கள், வெளிவந்திருக்கும் ஏனைய போலித்தைலங்களைப்போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

பனிதர் முக்கியமாகத் தெரிந்துசொல்வதும், மாதர் அதிகமாக விரும்புவதும் 35 வருஷங்களாக யாவராலும் அதிகமாகப் புகழப்படுவதும் இந்த நேத்திரானந்த தைலமே.

இந்தச் சிறந்த எண்ணெய்க்கு நீண்ட பெயர் உண்டு என்று வைர்த்திரிநிற ஒவ்வொரு சிறபின்னைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலை மயக்கம், கண் எரிவு, தலைவலி, இள நரை, தலைவழுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற நிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதம் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினால் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது தற்காலத்தில் செய்யப்படும் போலித் தைலத்தைப் போலல்ல இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப்பட்டுள்ளது.

தலைமை ஸ்தானம்:—

வைத்தியசேகர முதலியார்,
டப்ளியு. டானியல் பெர்னாண்டோ,
ஸ்ரீவேத வளவும், பாணதுறை.

கிளை ஸ்தானம்:—

பௌத்தமந்திர வைத்தியசாலை.
நோரிஸ்ரோட், கொழும்பு—இலங்கை
காவில் ஹோட்டல், கண்டி.

தந்தி விலாசம்:—வேத முதலியார் பாணதுறை.

(H 332, 20-3-36 to 19-9-36)



### கண்ணே பிரதானம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கில் பிறவுண்ரோட் (கரியன் குன்று) ரத்தினவாசத்தில் அமைக்கப்பெற்ற அமிர்தானந்த வைத்தியசாலையில் இப்போது நேத்திரத்திற்குரிய சிகிச்சைக்கு வேண்டப்படும் ஔஷதங்கள் கருவிகளும் சேர்க்கப்பட்டிருத்தலால் வேண்டுபவர்கள் காலை 7 மணி முதல் 10 மணி வரை வசதியாக ஆலோசனை செய்து சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம். மற்றைய நோய்களுக்கு வேண்டிய சிகிச்சை முன்போல் நடைபெறும்.

வைத்தியசாலை சொந்தக்காரர்
த இராமலிங்கம்
வைத்தியர்

Address:—
Manager
Amirdananda Vaidyasalai
"Ratna Vasa" Brown Road
Vannarponnai
Jaffna (Ceylon)

Y2 6. 7-5-36 to 30-4-37 (வி)


### விளம்பர விகிதம்.

வியாபாரத்தை விருத்தி செய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1 | பத்தி (கலம்) | ரூபா | 10-00 |
| $\frac{1}{2}$ | ,, ,, | ,, | 5-50 |
| $\frac{1}{4}$ | ,, ,, | ,, | 3-00 |
| 1 | அங்குலம் | ,, | 1-00 |

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் நீடித்த விளம்பரங்கள், விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

மானேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை


கோடைகாலத்திற் பீடிக்கும் தலைவலியைத் தடுப்பதற்காக ஒரு போத்தல்

## லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம்

## தைலத்தை

வாங்கி வைத்திருங்கள்

இதுவே

இந்தியாவில் சிறந்ததும் முதன்மையானதும்

Y 44 1-1—31-12-36)


படுபயன் வெஃகிப் பழிப்படுவசெய்யார்
நடுவன்மை நாணுபவர்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.


Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, July 2nd 1936.